

# ஞானச்சுடர்

பங்குனி

மலர் 2007



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



உ

# குறள்வழி

**ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று**
**போற்றினும் பொத்துப் படும்.**

**பொருள்:** முடிக்கவல்ல வழியை அறிந்து கருமத்தை முயலாவிட்டால், துணைவர் பலர் நின்று குற்றம் வராமற் காப்பினும் அக்கருமம் கெட்டுவிடும்.

(468)



# நற்சிந்தனை

## திருவம்மானை - 1

### ஐயடித்தரவு கொச்சகக் கலிப்பா

வேதம் வகுத்தானை வேதத்தி னுட்பொருளைப்
பாதந் தொழுவர்க்கள் பாக்கியத்தைப் பச்சைமால்
பேதந் தவிர்த்தாண்ட பிஞ்ஞகனைப் பிறப்பிலியை
மாதவி புன்னைமௌவல் வளர்ந்தோங்கு நல்லூரில்
பாதம் பரவிநாம் பாடுதுங்கா ணம்மானாய் 5

உயிருக் குயிராகி யுள்குவா ருள்ளத்தே
பயிலுந் திருவுருவைப் பற்றற்றார்க் குறுதுணையைக்
கயிலைப் பதியானைக் காளகண்டங் கொண்டவனை
மயிலைப் பொருவுமையாள் மருவுதிருப் பாதியனைத்
துயிலை யறநீக்கித் தோத்திரிப்போ மம்மானாய் 6

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 111

## 2007 பங்குனி

## பொருளடக்கம்



| | | |
|---|---|---|
| தாய் உள்ளம் | மு. சிவலிங்கம் | 1 - 3 |
| அருணகிரிநாத சுவாமிகள்.... | S.S. றஜீந்திரன் | 4 - 7 |
| தவமுனிவனின் தமிழ் மந்திரம் | சிவமகாலிங்கம் | 8 -12 |
| போற்றிப்பாடி வழிபட்டு.... | ஐ.கோ. சந்திரசேகரம் | 13 -15 |
| மனித ஆளுமையில் இசையின் | ச. சரவணமுத்து | 16 - 17 |
| முன்னோர் சொன்ன கதைகள் | சி. யோகேஸ்வரி | 18 - 19 |
| வாரியார் சுவாமிகள்..... | வல்வையூர் அப்பாண்ணா | 20 - 22 |
| சற்றேவிலகும் பிள்ளாய் | பா. சிவனேஸ்வரி | 23 - 25 |
| திருவாசகத் தேன்துளி..... | தி. கேசவன் | 26 - 29 |
| ஆறுவது சினம் | நா. நல்லதம்பி | 30 - 32 |
| தேவாரமுதலிகளும் மணிவாசகரும் | ஆ. மகேசு | 33 - 35 |
| நித்திய அன்னப்பணி | | - 36 |
| முருகனும் வள்ளலாரும் | நீர்வை இரா-சு | 37 - 39 |
| அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர் | தி. வரதவாணி | 40 - 41 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 42 - 44 |



அன்பளிப்பு:-

மலர் ஒன்று 30/= ரூபா

வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்:- 021- 2263406

பதிவு இல. Q.D./44/NEWS/2007

அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.

உ

# ஞானச்சுடர்
# மாசிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

மாசிமாத மலருக்கான வெளியீட்டுரையினை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு துரை கணேசமூர்த்தி அவர்கள் நிகழ்த்தினார்கள்.

ஆசிரியர் தமது உரையின்கண் பலவிதமான கருத்துக்களைக் கூறியதுடன், ஆச்சிரமம் பேரவை என்று ஒன்று இருக்குமானால் அதன் பணிகள் எந்தெந்த வகையில் இருக்கவேண்டுமோ அந்தந்த வகையில் சந்நிதியான் ஆச்சிரமமும் பேரவையும் செயலாற்றுவதனை புலம் பெயர்ந்துவாழும் நாடுகளிலுள்ள தமிழ் மக்கள் உட்பட அனைவரும் அறிந்துள்ளதோடு இவ் ஆச்சிரமப் பணிகள் விரிவடைந்து முன்னெடுத்துச் செல்வதற்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிக்கொண்டு இருப்பதனையும் மண்டபத்தில் கூடியிருந்த அடியார்களுக்கு கூறியதுடன், ஞானச்சுடரின் நூற்றிப்பத்தாவது மலருக்கு வெளியீட்டுரையை நிகழ்த்துவதற்கு வாய்ப்பளித்த சந்நிதி வேற்பெருமானுக்கு நன்றி கூறி தமது உரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

பேரவையின் நூற்றிப்பத்தாவது ஞானச்சுடரின் மதிப்பீட்டுரையினை வயாவிளான் மத்திய மகாவித்தியாலத்தின் ஆசிரியரும் சைவப்புலவருமாகிய திரு செ. பரமேஸ்வரன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தமது மதிப்புரையை ஒரு யதார்த்தவாதி போன்று நாட்டில் தற்கால சூழ்நிலைகளோடு ஒப்பிட்டு ஞானச்சுடரில் வெளிவந்த கட்டுரைகளை தரம்பிரித்து மலர் வெளியீட்டுக்கு வருகை புரிந்த அன்பர்களுக்கு எடுத்து விளக்கியதுடன் ஒவ்வொரு மாத மலரிலும் இடம்பெற்றுவரும் கட்டுரைகள், பாடல்கள், பெட்டிச் செய்திகள், ஒவ்வொரு பக்கத்தின் அடியில் காணப்படும் பொன்மொழிகள் போன்றவையை தெரிவு செய்து வாசகர்களாகிய எமக்கு வழங்கிக்கொண்டு இருக்கும் மலர்க் குழுவினருக்கும் நன்றி கூறியதோடு வழமைபோன்று வருடா வருடம் தம்மையும் ஒரு பொருட்டாக மதித்து மதிப்புரையினை நிகழ்த்துவதற்கு ஊக்கம் அளிக்கும் பேரவைக்கும் சந்நிதி வேலவனுக்கும் நன்றிகூறி மாசிமாத மலருக்கான மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்கள்.

---

சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்

| காசுக்கட்டளை | காசோலை |
|---|---|
| செ. மோகனதாஸ் | செ. மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க. இல. P.7481 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| T.P.NO. 021- 2263406 | பருத்தித்துறை. |

www. sannithiyan. org

உ

# சுடர் தரும் தகவல்

நமது மனமானது எப்பொழுதும் எதையோ நினைத்தபடியே இருக்கும். அப்படி இருக்கும் காலங்களில் நல்லனவற்றையே எப்போதும் நினைக்கவேண்டும். நினைத்ததைச் செயலாற்றவேண்டும். நல்ல நினைவு இல்லையெனில் எமது வாழ்வு சிதைந்துவிடும். தனக்கு உரியவற்றையே தான் அனுபவிக்கவேண்டும். தன் உடைமை அல்லாதன வற்றை மனத்தினால் கூட நினைக்கக்கூடாது.

நினைவு எப்பொழுதும் இறைவன்மீது இருந்தால் துன்பமேயில்லை. வேறு நினைவிற்கே இடமில்லை. சிந்தனை முழுவதும் சிவன்பால் வைத்தவருக்கு தாம் அடிமை என்பார் சுந்தரர். எமது இன்றைய துன்பங்களுக்குச் சிந்தனை மாறுபாடே காரணம். இறைவழிபாடு, இறை சிந்தனை இவற்றிற்கு எமக்கு நேரம் இல்லை என்று நாள் முழுவதும் ஏதோ செய்கிறோம். தினமும் சிலநிமிடநேரமாவது இறைவனை நினைத்து வழிபடவேண்டும். ஆலயத்திற்குச் சென்று வழிபாடு இயற்றவேண்டும்.

நாம் உயர்ந்த ஆடை அணிகலன்களை அணிந்து கோயில்களுக்குச் செல்வதாலும் ஆர்வத்துடன் வணங்குவதாலும் இறைவனைக் காணமுடியாது. ஆலயச் சூழலில் உள்ள ஏழை, எளிய, வறுமை, நோய் முதலிய பிணிகளால் பீடித்துள்ள மக்களைப் பார்த்தும் பாராததுபோல் ஆலயத்திற்கு சென்று வழிபடுகின்றோம். ஆலயங்களில் நாம் செய்யும் எதுவும் மக்களை சென்றடைவதில்லை. எனவே நலிவுற்றவருக்கு உதவுவதே சைவசமயம் புகட்டும் பாடமாகும். சமயம் வேறு வாழ்க்கை வேறு என்று இல்லாமல் வாழ்வுடன் இணைந்து மானிட சமுதாயம் உய்யும் வண்ணம் ஒவ்வொருவரும் வாழவேண்டும். உலகில் உள்ள அனைத்து உயிர்களும் நலமாக வாழவேண்டும் என்று நினைக்கவேண்டும். ஆலயங்களுக்குச் சென்று தனக்கு மட்டும் வேண்டாது நாட்டில் இடம்பெற்றுவரும் சகல பாதிப்புக்களிலிருந்தும் எல்லா விதமான இடர்களையும் களையும் வண்ணம் இறைவனை வேண்டுதல் செய்யவேண்டும்.

நமது சமயத்தில் அன்றாடம் சமூகப்பணிகள் சமயப்பணிகள் செய்யுமாறு வலியுறுத்தப்படுகிறது. இவ்விதமாக சமய, சமூகப்பணிகளை ஆற்றும்பொழுது நாம் ஒடுங்கிய மனப் பான்மையிலிருந்து விலகி பரந்த மனப்பான்மையுள் உள்வாங்கப் படுகின்றோம். "சமயம் வெறும் வயிற்றுக்கு உரியதல்ல" என்று இராமகிருஷ்ண பரமஹம்சரும் "கடவுளை அடையச் சிறந்த வழி மனிதருக்கு சேவை செய்வதே" என்று சுவாமி விவேகானந்தரும் கூறியிருப்பதன் கருத்தினை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும்.

இவற்றிற்கெல்லாம் மூலகாரணமாக அமைவது மனம்தான் மனதுமது செம்மை யானால் மந்திரம் தேவையில்லை. அவ்வகையில் எமது மனம் நல்ல நினைவோடு இருக்குமானால் எல்லோரும் எல்லாமும் பெறுவார்களாக.

உ

# வந்தனை செய்து ஏத்தினேன்

அலங்கார முகமாறின்
அழகில் மனஞ்செல்ல
ஆறிரண்டு கரச் செயலில்
ஆர்வங் கொண்டு நின்றேன்
இலங்குவடி வேல்கண்டே
இதயந்திடம் கொண்டேன்
நாமிருக்கப் பயமுனக்கேன்
என்பது போல் நின்றான்
சிலம்புடனே தண்டையணி
திருவடியைக் காட்டி
சிறுமை கண்டு மயங்கேலென
தேற்றி நின்றான் தெளிந்தே
வலங் கொண்டு கோயில்சுற்றி
வந்துஅடி தொழுதே
வந்தனைசெய் தேத்திநின்றேன்
வடிவேல் துணை, என்றே

# ஆச்சிரமக் கொடைகள்

தைமாத ஞானச்சுடர்
தனை நன்றாய்ப் படித்தேன்
தருமஞ்செய் யாச்சிரமப்
பணிகண்டு மகிழ்ந்தேன்
மெய்யடியார் நொந்தாலது
முருகனுக்கு நோகும் என
நோக்கிச் செயும் தொண்டனைத்தும்
நேரில் நோக்கி மகிழ்ந்தேன்
தெய்வ அடியார், ஏழை
முதியவர்க்கு உடையும்
தேனீரும் நோயினர்க்கு
மருந்துந்தரக் கண்டேன்
துய்ய இந்த கற்பகமாம்
ஆச்சிரமம் வாழ
சுடர் நெடுவேல் சந்நிதியான்
தொடர வாழ்த்திப் பணிந்தேன்.

*முதுபெரும்புலவர்,*
*கலாபூஷணம் ஆசிரியர்,*
*வை.க. சிற்றம்பலவனார்.*

உ

# தாய் உள்ளம்

## திரு மூ. சிவலிங்கம் அவர்கள்

இவ்வரிய மானுடப் பிறவியில் தாய்க்குலத்தின் சிறப்பு ஆண்களிலும் ஒருபடி மேலானது. இதன் காரணம் தாய்மை என்னும் நிலைக்கு வருவதாலாகும். தாய்மையடைந்த பெண்கள் அவர்களுக்கே இயல்பான குணங்களான அன்பு, பொறுமை, அமைதி, இரக்க சிந்தனை, சகிப்புத்தன்மை போன்றவற்றால் பிரகாசிக்கிறாள். மேலும் தாய்மை அடைந்த ஒரு பெண் பூரணமாகவே மன நிறைவடைகிறாள். அவள் கருவுற்று ஒரு மழலைச் செல்வத்தைப் பெற்றெடுக்கும் வரை அடையும் துன்பங்கள், வேதனைகளால் மறுபிறவி எடுத்தவளாகவே கருதப்படுகிறாள். ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தபோது அவள் முன்பட்ட துயரமெல்லாம் மறைந்து தாய் உள்ளம் தூய அன்பாக உருவெடுக்கிறது. ஒரு தாயின் சிறப்பை பட்டினத்தடிகள்,

"ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்றபோதே பரிந்தெடுத்துச் செய்யஇரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை"
முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட் சுமந்து என்றும்
அந்தி பகலாய்ச் சிவனை ஆதரித்துத் தொந்தி
சரியச் சுமந்து பெற்றதாய் என்றும்
வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய் என்றும்
நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்தி முலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய்" என்றும் கூறுகின்றார்.

ஒரு பெண் தாய்மையினால் தூய அன்புடன் எப்படி அரவணைக்கிறாளோ அதனிலும் மேலான பற்றுடன் தெய்வ சக்தியரும் சிறப்பித்துள்ளனர். மேலும் மிருகங்கள், பறவைகள் என்பனவும் தமது தாய் அன்பில் மிக்கவையாகவே காணப்படுகின்றன.

சைவசமயம் நலிவுற்றபோது அதைப்பேணி வளர்க்கவென்றே சீர்காழியில் பிறந்த மழலை காலையில் கோயிலுக்குச் செல்லும் தந்தையுடன் கூடச்சென்றது. கோயிலின் அண்மையில் உள்ள திருக்குளத்தின் கரையில் பிள்ளையை இருத்திவிட்டுத் தந்தை நீராடக் குளத்தில் இறங்கி நீரில் மூழ்கினார். தந்தையைக் காணாத பாலகன் எதிரேயுள்ள தோணியப்பரின் ஆலயக் கோபுரத்தை நோக்கி "அம்மே அப்பா" என்று அழுது ஓலமிட்டான். தன்பிள்ளை அழும்குரல் கேட்ட அம்மை (உமாதேவி)

நம்பிக்கை இல்லாத இடத்தில் முயற்சியும் இருக்கக்கூடாது.

யும், அப்பரும் பிள்ளையை அணுகினர். உலகமாதா தனது திருமுலைப் பாலைப் பொற்கிண்ணத்திற் கறந்து ஊட்டினாள். அன்னையின் திருமுலைப்பால் - ஞானப் பால் பிள்ளையை ஞானசம்பந்தனாக்கியது. ஞானம்பெற்ற சம்பந்தர் இறைவனைப் பாடிப் பல அற்புதங்களைச் செய்தார். உலகமாதாவின் உள்ளன்பினால் சைவசமயம் வளர்க்கத் திருஞானசம்பந்தர் கருவியாக அமைந்தார். இது புராணவரலாறு.

இணுவில் - கோண்டாவில் காரைக்கால் என்னும் திருப்பதியிலுறையும் மாரியம்மன் அற்புதமானவர். இப்பகுதியில் வாழ்ந்த சுப்பிரமணியம் என்னும் விவசாய இளைஞர் தமது ஆநிரைகளை அவ்வயலில் மேய்ப்பது வழக்கம். இவரது தாயார் மதிய உணவை உரிய நேரத்தில் கொண்டு வந்து வழங்குவார். ஒரு மதியம் தெய்வீக சக்தியால் இவரது உணவு வரப்பிந்தியது. பசியால் வாடிய இளைஞர் மாரியம்மனின் அருகேயுள்ள மரநீழலில் உறங்கிவிட்டார். தன்பிள்ளை பசியால் வாடுவதைப் பொறுக்காத உலகமகாசக்தி அவரின் தாயின் உருவத்தில் வந்து மதிய உணவைக் கொடுத்தார். சுப்பிரமணியம் அன்னையின் திருவமுதை மிகவிருப்புடன் சுவைத்து உண்ணும் அழகை அவதானித்த பின் மாரியம்மன் மறைந்தருளினார். மாரியம்மன் தந்த திருவமுதை உண்டவர் பெருஞ்சித்தரானார். இப்பதியின் கோயில் திருப்பணிகளடங்கிய பல சமய, சமூகப்பணிகளை மேற்கொண்டார். மேலும் இணுவில் கந்தசுவாமி கோயிலில் உலா வரும் உலகப் பிரசித்திபெற்ற பெருமஞ்சம் இச்சித்தரின் பெருமுயற்சியால் நூறு வருடங்களுக்கு முன் உருவானது. உலகமாதாவின் தாயுள்ளம் எமது கிராமத்தில் பெருஞ்சித்தர் மூலம் பல அற்புதங்களைச் செய்வித்ததால் இப்பகுதி மக்கள் அம்பாளைப் பக்திபூர்வமாக வழிபடுகின்றனர். இது ஒரு உண்மையான வரலாறாகும்.

மநுநீதி கண்ட சோழனின் ஏகபுத்திரன், இளவரசனான வீதிவிடங்கன் வீதியில் தேரின்மீது உலாவந்தான். அதே சமயம் இளங்கன்று பயமறியாது என்றாற் போல ஒரு பசுவின் கன்று துள்ளி விளையாடி இளவரசனின் தேர்ச்சில்லில் அகப்பட்டு உயிர்துறந்தது. இதையறிந்த தாய்ப் பசு ஒவென்று கதறிக்கொண்டு ஓடோடி வந்தது. கன்றைச் சுற்றிச்சுற்றி வந்து பார்த்தது. பெற்ற தாய்க்கு தன் பிள்ளை இறந்ததால் பொறுக்கமுடியாத நிலையில் கன்றினருகே சென்று துடிதுடித்துப் புரண்டு தனது உள்ளத்திலிருந்த கவலையை வெளியிட்டது. மேலும் தாங்காது அரசனிடம் முறையிடுவது போல அரச அரண்மனை வாசலில் கட்டியிருந்த ஆராய்ச்சி மணியைத் தனது கொம்பினால் அடித்துக் கொண்டிருந்தது. இதனையறிந்த மன்னன் தனது ஒரே மகனைத் தனது தேர்ச்சில்லினால் முட்டி இறக்கச் செய்தான். இதே சமயம் நீதியின் பெருமையால் இறைவன் நேரில் வந்து பசுக்கன்றையும் இளவரசனையும் உயிர்பெறச்செய்தார். உயிர்பெற்றெழுந்த கன்று தாய்ப்பசுவுடன் இணைந்து மகிழ்ந்தது. தாய்ப்பசுவின் மடியில் பொங்கி வழியும் பாலை உண்டு. மகிழ்ந்தது. இப்பசுவின் தாய் அன்பு மேலீட்டினால் மநுச்சோழனின் நீதியும் புகழும் இன்றுவரை நிலைத்துள்ளமை வரலாற்றின் சிறப்பாகும்.

பூனை எலி பிடித்து உண்ணும். எலி இரையாக அகப்படும்போது வாயி

னால் கடிக்கும். பூனையின் கோரப் பல்லானது கொலைக்குரிய ஆயுதமாகிறது. ஆனால் பூனை தன் சிறு குட்டிகளை அடிக்கடி இடம்மாற்றி எடுத்துச் செல்லும். எலியைக் கொல்லும் கொடிய வாயும் கூரிய பற்களும் பூனை தன் குட்டிகளை வாயால் கௌவிக்கொண்டே செல்லப் பயன்படுகிறது. தன் குட்டி மீதுள்ள தாய் அன்பினால் குட்டியைத் தாக்காத மென்மையுடன் காவிச்செல்கிறது. அறிவு கிடைக்காத பூனையானாலும் பிள்ளை (குட்டி) மீதுள்ள தாயன்பினால் தாக்கமற்ற நிலையில் காவி இடம்மாற்றுகிறது. இங்கு தாயின் அன்புள்ளம் நன்கு புலனாகிறது.

நாய் போன்ற மிருகங்களும் சிறு குட்டிகளைப் போட்ட காலத்தில் குட்டிகளின் பாதுகாப்புக் கருதி எவரும் குட்டிகளை அணுகவிடாது தாயன்பு தடுக்கிறது. காகம் தன் குஞ்சுக்கு இரைதேடிக் கொண்டு வந்து ஊட்டும். ஏதாவது உணவு கிடைத்தால் தன் வாய் நிறையச் சேகரித்துத் தன் குஞ்சின் பசியாற்றும். பின்புதான் தனக்குரிய உணவைத் தேடும். "காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு" என்றாற் போல் குஞ்சுகளைத் தம் பாச உணர்வினால் நன்கு பேணிப் பாதுகாக்கிறது. இதனால் பிராணிகள், பறவைகளின் தாயன்பு எமக்குப் புரிகிறது.

மனித குலத்தில் தாய் தனது வற்றாத அன்பினால் தன் பிள்ளை மீது மிதமான பாசத்தை அள்ளி வீசுகிறாள். ஒரு பிள்ளைக்கு உணவு மட்டுமன்றிப் பாலையும் நேரம் உணர்ந்து ஊட்டுகிறாள். மாணிக்கவாசகரும் "பால் நினைந்தூட்டும் தாய்" என்று விதந்து கூறுகிறார். பிள்ளைகள் மீது தாய்ப் பாசத்தினால் பலனை எதிர்பாராது மனம் நெகிழ்ந்து வேண்டியவற்றை ஊட்டுகிறாள். இதனால் "பெற்ற மனம் பித்து" என்ற முதுமொழியும் ஏற்பட்டது.

பிள்ளையின் பாச மிகுதியால் தன்னையே மறக்கிறாள். தன் பிள்ளைக்காகப் பரிந்து பேசுவாள். பூரண சுகதேகியான பிள்ளையைப் பார்த்து "துரும்பாய் இளைத்து விட்டாயே" என்று இரங்குவாள். பட்டினத்தார் தனது தாயாரால் நன்கு அரவணைக்கப்பட்டவர். தன் தாயைத்தான் (கருவறையில்) குடியிருந்த கோயில் என்று மறக்காத நிலையில் அடிக்கடி சொல்லுவார். தான் துறவியான பின் தாயின் இறுதிக்காலத்தில் அவரது பூதவுடலைத் தகனம் செய்ய இருந்தபோது தாயின் பெருமைகளையும், தாயன்பையும், பல பாடல்களினால் வெளிப்படுத்தினார். மேலும் தனது தாய்க்குரிய சகல இறுதிக் கடமைகளையும் நிறைவேற்றினார். ஒரு தாய் தன் பிள்ளைக்காகத் தன் தாய்மை என்னும் சிறப்பால் தன்னை அர்ப்பணித்து ஆளாக்கி வளர்த்தெடுக்கிறாள். இதனை நன்குணர்ந்து நன்றிக்கடனாகத் தாயை நன்கு பேணவேண்டும். எமது நன்றியறிதலினால் தாயானவள் தனது தாயுள்ள மகிமையால் எம்மை ஆசீர்வதிப்பாள். எல்லோரும் இன்புற்று வாழ இறையருள் உதவட்டும்.

நல்லொழுக்கம் உடையவன் சகல நலன்களையும் பெறுகிறான். அதில் தவறியவன் நோயுற்றவனாகவும், துன்பமடைபவனாகவும் ஆகிறான்.

எப்போதும் உண்மையே பேசவேண்டும். உண்மையே ஆனாலும் விருப்பமற்றதைப் பேசக்கூடாது. அதே வேளையில், விருப்பத்துக்காக பொய்யும் பேசக்கூடாது.

**தன்னலம் மிகுந்த வாழ்க்கை ஒருகாலும் இன்பத்தை எய்தாது.**

உ

(தொடர்ச்சி...

# அருணகிரிநாதசுவாமிகள் திருப்புகழும் கிருபானந்தவாரியார் பொருளுரையும்

திரு S.S. றஜீந்திரன் அவர்கள்

### *சிவராத்திரி*

தக்கன் பிரமதேவரின் மகன் ஆவான். சிறந்த சிவபக்தன். சிவபெருமானை நோக்கித் தவம் செய்து பெரும் வரங்களைப் பெற்றான். உமையவள் மகளாகவும் சிவனார் மருகனாகவும் கிடைக்கப்பெற வரம் பெற்றான். திருமாலின் திருப்பாதத்தில் தோன்றிய கற்பரசியான வேதவல்லியை மணங்கொண்டான். அவன் இரண்டாயிரம் புதல்வர்களைப் பெற்றான். அவர்கள் நாரத முனிவரின் அறிவுரையினால் சிவனை நோக்கிப் பெரும் தவம் இயற்றி முத்திபெற்றார்கள். இதனால் கோபமுற்ற தக்கன் நாரதமுனியை **"நிலைபேறு இல்லாமல் எங்கும் உழல்வாயாக"** என்று சபித்தான். பின்பு 23 புதல்விகளைப் பெற்றுத் தருமதேவனுக்கும், சிறந்த தவமுனிவர்களுக்கும் திருமணம் செய்து கொடுத்தான். மேலும் 27 புதல்விகளைப் பெற்று சந்திரனுக்கு திருமணம் செய்து கொடுத்தான். சந்திரன் இருபத்தேழ்வரிடம் சமமாக அன்பு காட்டாததால் கோபமுற்ற தக்கன் **"நீ தேய்ந்து ஓய்ந்து மறைந்து போவாயாக"** என்று சாபமிட்டான்.

இவ்வாறு இருக்கும் காலத்தில் திருக்கைலைமலையில் சிவனும் உமையவளும் வீற்றிருந்த போது உமையவள் **"சக்தியாகிய என்னால் தான் இவ்வுலகம் இயங்குகிறது"** என்று சிவனாரிடம் வியந்து உரைசெய்தார். சிவனார் புன்னகை செய்து **"யாமின்றி எவையும் இயங்கமாட்டா"** என்று கூறி ஒரு கணம் தனித்து நின்றார். உடனே அகில உலகங்களும் பலயுகங்கள் அசைவற்றுப் போயின. எங்கும் இருள் மூடியது. அம்பிகை அரன் அடியில் வீழ்ந்து **"இறையே எல்லாம் நீரே என்பதை உணர்ந்தேன் கருணை புரிக"** என்று வேண்டினார். சிவனார் பிரமன் நெற்றியில் தோன்றிய பதினொரு உருத்திரர்களுக்கும் முதலில் உணர்வு தந்தருளினார். அவர்கள் திருவிடைமருதூர் வந்து சிவனாரை நினைந்து ஐந்தெழுத்தை ஓதி வில்வம், தும்பை ஆகியவற்றால் சிவபெருமானை அர்ச்சித்தார்கள். அந்நாளே சிவராத்திரி ஆகிற்று. காட்சி கொடுத்த சிவனாரிடம் "இச் சிறந்த சிவராத்திரி நன்னாளில் நின்னைத் தரிசிப்போர் எல்லா நலங்களும் பெற்று சிவகதி பெற அருள் செய்ய வேண்டும்" என்று வரம் வேண்டினார்கள்.

திருமாலும், பிரமனும் அடிமுடி தேடியதும் சிவனார் ஒளிப்பிழம்பாகக் காட்சி கொடுத்ததும் அவ் ஒளிப்பிழம்பு குறுகிவந்து நினைத்தாலே முத்திதரும் திருவண்ணாமலை ஆகியதும், சிவராத்திரி என்னும் நன்னாளிலே நடைபெற்றன.

கீழ்வரும் பாடலில் கதிர்காமக் கந்தனை இவ்வாறாக வேண்டுகிறார்

"இராமாயணத்தில் தேடற் படலத்தை **நினைவூட்டும்** பாடலாகும். இராமபிரான் வேண்டுகோளுக்கு ஏற்பக் குரங்குகளின் மன்னனான சுக்கிரீவன் சீதாப்பிராட்டியைத் தேடும் பொருட்டு மேற்கே

சுஷேணனையும், வடக்கே சதவரியையும், கிழக்கே வினதனையும், தெற்கே அனுமான், ஜாம்பவான், நீலன், அங்கதன் ஆகியோரையும் அனுப்பி ஒரு மாதகாலத்தினுள் திரும்பவேண்டும் என்று தவணை கொடுத்துத் தன் படைகளை அனுப்பினான்.

"குறிப்பிற் குறிப்புணர்வாரை உறுப்பினுள்.
யாது கொடுத்துங் கொளல்"

என்ற வள்ளுவப் பெருமானின் வாக்கிற்கு இலக்கணமான அனுமார் தென்கடல் வரை தேடிய நிலையில் சம்பாதி கூறியதைக் கேட்டுக் கடல் தாண்டி இலங்கைக்கு வந்து அசோகவனத்தில் சிறீராமன் கூறிய அடையாளங்களைக் கொண்டு சீதாப்பிராட்டியைக் கண்டு சிறீராமன் கூறியவற்றையும். கணையாழியையும் சீதாப்பிராட்டியிடம் கொடுத்துப் பின் இலங்கை நகரை எரியூட்டி (நந்திப் பெருமான் இராவணனுக்குக் கொடுத்த சாபத்தால்) மீண்டு சென்ற போது மாணிக்க கங்கையில் மூழ்கி வேலவரை வழிபட்டார். அவ்வாறான சிறந்த கதிரை நாயகனை மானத்தை மறைக்கத் துணியும் பசி, தாகத்தைப் போக்க நீர் உண்டி போன்றவற்றையும் வாலிபப் பருவத்தில் ஆடம்பரமாக உடுப்பதற்குச் சிறந்த ஆடையையும் அழகாக இருப்பதற்கு உடம்பைச் சுத்தம் செய்ய நீரும் நோய்களை மாற்ற மருந்துகளும் பின் சுகத்தைச் சேர்க்க இளம் மனைவியையும் (தன்னைவிட வயதிற் குறைந்த பெண்) அவளுடன் வசிப்பதற்குத் தனியே ஒரு வீடு (எலி வளை ஆனாலும் தனிவளை வேண்டும்) என்ற யாவற்றையும் பெற்றுப் பிள்ளைகள், மாமன், மைத்துனன், மருகன் என்ற பலவாறான பாச பந்தங்களைக் காப்பவனாக இருந்து அழியாமல் நின்னுடைய அருள் உள்ளமும், சிவஞான போதமும் பெற வழிசெய்ய வேண்டும்" என்று வேண்டுகிறார் அருணகிரிப் பெருமான்.

பாடல்

உடுக்கத் துகில்வேணும் நீள்பசி
யவிக்கக் கனபானம் வேணும்நல்
ஒளிக்குப் புனலாடை வேணும்மெய் யுறுநோயை
ஒழிக்கப் பரிகாரம் வேணும்முள்
இருக்கச் சிறுநாரி வேணுமொர்
படுக்கத் தனிவீடு வேணுமிவ் வகையாவுங்

கிடைத்துக் க்ருஹவாசி யாகிய
மயக்கக் கடலாடி நீடிய
கிளைக்குப் பரிபால னாயுயி ரவமேபோம்
க்ருபைச்சித் தமுஞான போதமு
மழைத்துத் தரவேணு மூழ்பவ
கிரிக்குட் சுழல்வேனை யாளுவ தொருநாளே

குடக்குச் சிலதூதர் தேடுக
வடக்குச் சிலதூதர் நாடுக
குணக்குச் சிலதூதர் தேடுக வெனமேவிக்
குறிப்பிற் குறிகாணும் மாருதி
யினித்தெற் கொருதூது போவது
குறிப்பிற் குறிபோன போதிலும் வரலாமோ

அடிக்குத் திரகார ராகிய
வரக்கர்க் கிளையாத தீரனும்
மலைக்கப் புறமேவி மாதுறு வனமேசென்
றருட்பொற் றிருவாழி மோதிர
மளித்துற் றவர்மேல் மனோகர
மளித்துக் கதிர்காம மேவிய பெருமாளே

பொருளுரை

**உடுக்கத் துகில் வேணும் நீள்பசி**
**அவிக்கக் கனபானம் வேணும் நல்**
**ஒளிக்குப் புனல் ஆடை வேணும் மெய் உறு நோயை**

உடுப்பதற்குத் துணி வேண்டும். பசியைப் போக்க சிறந்த பதார்த்தங்கள் வேண்டும். அழகாக இருப்பதற்கு நீரும் ஆடையும் வேண்டும். உடம்பில் ஏற்படுகின்ற நோய்களை

**ஒழிக்கப் பரிகாரம் வேணும் உள்**
**இருக்கச் சிறு நாரி வேணும் ஓர்**
**படுக்கத் தனி வீடு வேணும் இவ் வகை யாவுங்**

மாற்றுவதற்கு மருந்துகள் வேண்டும். வாழ்க்கையில் சேர்ந்திருக்க இளம் பெண்வேண்டும். வசிப்பதற்கு ஒரு தனிவீடு வேண்டும். இவ் உலக சுகங்கள் யாவும்

**கிடைத்து க்ருஹ வாசி ஆகிய**
**மயக்கக் கடல் ஆடி நீடிய**
**கிளைக்குப் பரிபாலன் ஆய் உயிர் அவமே போம்**

கிடைக்கப்பெற்றுக் குடும்பத்தவனாகி மாயப்பிறப்பு எனும் கடலில் சேர்ந்து பெரிய சுற்றத்தைக் காப்பவனாக இருந்து உயிர் வீணே அழிந்து போவேன் ஆதலால்

**க்ருபைச் சித்தமும் ஞானபோதமும்**
**அழைத்துத் தரவேணும் ஊழ்பவ**
**கிரிக்குட் சுழல்வேனை ஆளுவது ஒரு நாளே**

தேவரீர் என்னை அழைத்து உமது கருணை உள்ளத்தையும், சிவஞான

போதத்தையும் தரவேண்டும். (இறைவன் எம்மைத் தேடி வராமல் அவர் இடத்திற்கு எம்மை அழைக்க அருள்வேண்டும் என்கிறார்) ஊழ்வினையால் வரும் பிறவி எனும் மலைக்குள் உழல்கின்ற என்னை ஆட்கொள்ளும் நாள் எந்நாளோ?

**குடக்குச் சிலதூதர் தேடுக**
**வடக்குச் சிலதூதர் நாடுக**
**குணக்குச் சிலதூதர் தேடுக என ஏவி**

மேற்கே சில தூதர் தேடிச்செல்க. வடக்கே சில தூதர் தேடிச்செல்க. கிழக்கே சில தூதர் தேடிச்செல்க என்று சுக்கிரீவன் ஆணையிட்டு

**குறிப்பிற் குறி காணும் மாருதி**
**இனித்தெற்கு ஒரு தூது போவது**
**குறிப்பிற் குறி போன போதிலும் வரலாமோ**

அடையாளங்கள் மூலம் இனம் காணக்கூடிய அனுமன் இனித் தென்புறம் செல்லவேண்டும் (ஒரு தூது என்பது வேறு யாரும் செல்லத் தகுதியற்றவர் அனுமார் மட்டுமே தகுந்தவர் என்ற சிறப்பைக் குறிப்பதற்குப் பயன்பட்டது. மற்றைத் திசைகளுக்குச் செல்க எனும் பதத்தினையும் தென்திசைக்கு தூது செல்வதும் எனும் பதத்தினையும் பயன்படுத்திய காரணம் அனுமாரின் சிறப்பைக் கூறுவதற்கு அருணகிரிப் பெருமான் கையாண்ட முறையாகும்) குறிப்புக்களைத் தெரிந்து சென்ற அனுமார் பிராட்டியாரைக் காணாது திரும்புவாரோ! (இல்லை)

**அடிக்குத்திரகாரர் ஆகிய**
**அரக்கர்க்கு இளையாத தீரனும்**
**அலைக்குப் புறம் ஏவி மாது உறு வனமே சென்று**

வேரோடு வஞ்சகர்களாகிய அசுரர்களுக்குக் குறையாத வீரத்தையுடைய அனுமார் அலை மேவும் கடலின் மறுபுறம் (இலங்கை) சென்று (சீதாப்பிராட்டி) சிறைவாசம் புரிகின்ற அசோகவனம் சென்று

**அருள் பொன் திரு ஆழி மோதிரம்**
**அளித்து உற்றவர் மேல் மனோகரம்**
**அளித்துக் கதிர்காம மேகிய பெருமாளே**

இராமபிரான் அருளிய சிறந்த பொன் மோதிரத்தை (கணையாழியை)ச் சீதாப்பிராட்டியாரிடம் கொடுத்துத் திரும்பிய அனுமார் மீது சிறந்த அருள் பாலித்துக் கதிர்காமம் எனும் சிறந்த தலத்தில் உறைகின்ற பெருமிதம் மிக்கவரே!

(தொடரும்...

நல்லவர்களுக்கு வரும் துன்பம் தற்காலிகமே. அதுபோல, தீயவர்கள் பெறும் நன்மையும் தற்காலிகமே. எனவே, துன்பத்தை நினைத்து அஞ்சி, நல்லவர்கள் அதர்மத்தில் நுழைந்து விடக்கூடாது.

**மனச்சாட்சியைத் துறந்தவனிடம் மதிக்கத் தக்கது வேறெதுவும் கிடையாது.**

உ

(தொடர்ச்சி...

# தவமுனிவனின் தமிழ் மந்திரம்

## சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் அவர்கள்

அன்பு ஒன்று தான் இறைவனை அடையும் மார்க்கம் என்பதை வலியுறுத்திய திருமூலர் "அன்பு செய்பவர்களைச் சிவன் அறிவார்" எனக் கூறுகின்றார். அறிவித்தால் அறிந்து கொள்ளும் உயிருக்கும் அறிவிக்கும் தன்மையுடைய இறைவனுக்குமுள்ள தொடர்புதான் அன்பு எனப்படுகிறது. ஆன்மாக்கள் ஒப்புயர்வற்ற இறைவனிடத்திலே வைக்கும் தொடர்பு பக்தி என்றும் இறைவன் நம்மீது வைப்பது அருள் என்றும் அழைக்கப்படும்.

வேறுபொருள்களில் இச்சை செலுத்தாமல் தன்னையும் இறைவனையும் நன்றாக இணைத்துக் கொண்டு இடைவிடாமல் பக்தி செலுத்துகிறவர்களை இறைவன் நன்கு அறிவான். பரமேஸ்வரன் சுயம் பிரகாசமாக உள்ளவர், ஜோதியாக உள்ளவர் ஆதலால் நாம் ஒளிபெற்று ஒளியிலே நின்று நமக்கு ஒரு செயல் இல்லாது நின்றால் இறைவன் நம்முடைய அகத்திலே எழுந்தருளி அருளுவான். அறிவிலே தெளிவு பெற்று எல்லாம் ஈசன் செயல் என்ற நினைப்போடு ஆணவம் ஒழிந்த நிலையில் இறைவனிடம் சரண்புகுந்து பக்தி செலுத்துவோமானால் திருவருள் தானாகவே வந்து அணைத்துக் கொள்ளும் என்பதைத் தவயோகியின் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

ஈசன் அறியும் இராப்பகலுந் தன்னைப்
பாசத்துள் வைத்துப் பரிவு செய்வார்களை
தேகற்று அறிந்து செயலற்றிருந்திடில்
ஈசன் வந்தெம்மிடை ஈண்டு நின்றானே

மனத்தைத் தீயவழியிற் புக விடாது நல்வழியிற் செலுத்தி மாட்சி பெற வைப்பது கல்வி. மனிதரிடத்தில் உள்ள மிருகத் தன்மையை மாற்றி அவர்களுக்கு மனிதத் தன்மையைக் கொடுக்க வல்லது கல்வி. ஒரு பிறப்பின்கண் பயின்ற கல்வியானது அப்பிறவி ஒழியினும் தான் ஒழியாது உயிருடன் எழுமையும் தொடர்ந்து சென்று உதவும் தன்மையுடையது என்பதை,

ஒருமைக்கண் தான் கற்ற கல்வி
ஒருவற்கு எழுமையும் ஏமாப்புடைத்து

என வள்ளுவர் கூறுகிறார்.

ஆன்மா இறைவனுண்டய திருப்பாதாரவிந்தங்களோடு இணைவதற்கு ஞானம் தேவைப்படுகிறது. சாதாரண உலகியல் அறிவு ஞானம் ஆகிவிடாது. எதை அறிவதால் ஒருவனுடைய அறிவு பூர்த்தியாகிறதோ அதை அறிவது தான் ஞானம் எனப்படும். வாழ்வின் குறிக்கோளை விளங்க வைப்பதோடு பிறவி வேரை வீழ்த்த வல்லதும் ஞானமே ஆகும். எனக்கீதையும் ஞானத்தின்

வறுமையிலும் நிறைவு காணும் ஏழையே மிகப்பெரிய செல்வனாவான்.

பெருமையை விதந்து கூறுகிறது.

நூல்கள் உலகநூல், கடவுள்நூல் என இரண்டு பிரிவினுள் அடங்கும். உலக நூல்கள் யாவும் மனிதனுடைய உள் ளத்தை வெளிப்பொருளிலே செலுத்தி மென்மேலும் ஆசையைப் பெருக்கும். உணர்ச்சி அறிவை வளர்க்கும். கடவுள் நூல்கள் எனப்படுபவை மனிதனுடைய உள்ளத்தை அகமுகமாகத் திருப்பி எல் லாச் செயற்பாடுகளுக்கும் மூலம் எது வென அறிந்து அந்தப் பொருளோடு ஒன் றாகக் கூடிய ஞானத்தை விளைவிக்கும். கல்வி அறிவினால் உண்டாவது அபர ஞானம் எனப்படும். அநுபூதி ஞானம் எனப் படும் பரஞானம் குருவின் திருவருளி னாலேயே கிடைக்கும். ஞானநூற் கல்வியே மிகவும் இன்றியமையாதது இத னால் அகக்கண் எனப்படும் பதிஞானம் உண்டாகும். ஞானம் பெறுதலின் பயன் இறைவனின் திருவடி தொழுதலே ஆகும். தூய ஞானக் கல்வியாகிய திருவருட் கல்வியே பிறவிப் பிணிக்கு மருந்தாகக் காணப்படுகிறது.

கல்விக்குள் பெரிய கல்வியாகிய கடவுளைப் பற்றிய அருட்கல்வியை உடம்பில் ஆற்றல் இருக்கும் போதே கற்றுத் தேறுதல் வேண்டும். உடம்பில் உயிர் கலந்து நிற்கிற காலத்திலேயே அழிவற்றவனாகிய இறைவனுடைய பாதங்களை அறிந்து கொள்ளும் முறை களைக் கற்றுக் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு செய்கின்றபோது பாவங்கள் முற்றாக நீங்கிவிடும். மனம் ஒன்றி ஈசனை வழிபாடு செய்பவர்கள் ஒப்பரியசோதி ஒளியாகிய ஞான விளக்கொளியைக் காண்பார்கள். ஞானிகளின் உள்ளத்தில் இறைவன் கோயில் கொண்டிருக்கிறான். அவன் அருளைப் பெற்றவுடன் ஞானம் பிரகாசமாகும் என்பதை,

நிற்கின்ற போதே நிலை உடையான் கழல்
கற்கின்ற செய்ம்மின் கழிந்து அறும் பாவங்கள்
சொல் குன்றல் இன்றித் தொழுமின் தொழுதபின்
மற்று ஒன்று இலாத மணிவிளக்கு ஆகுமே

எனத் திருமந்திரப் பாடல் கூறுகிறது.

இறைவன் விக்கிரக வடிவில் பல தலங்களில் எழுந்தருளியிருக்கிறான். கடலும் மலையும் தலங்களாகக் கொண்டு வீற்றிருக்கிறான். பஞ்சபூதங்களிலும் இறை வனின் வியாபகம் காணப்படுகிறது. இதனை "வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி" என மணிவாசகர் தனது தெய்வ வாசகமாகிய திருவாசகத்திற் தறிப்பிடுகின்றார். இறைவன் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங் களையும் உடலாகக் கொண்டு உறை கிறான். பல ஊழிக் காலமாக இடபத்தை வாகனமாகக் கொண்டு சிவபெருமான் பக்தர்களுக்குக் காட்சி தருகின்றான். இத்தகைய இறைவன் மிகச் சிறிய இட மாகிய மனித நெஞ்சத்திலும் வீற்றிருக் கிறான். பக்தர்களுடைய நெஞ்சம் இறை வன் வீற்றிருக்கும் கோயிலாக அமைந் துள்ளது. "அகத்துறையும் அழகன்" என்றும் "உள்ளுவார் உள்ளத்து உளன் கண்டாய்" என்றும் நாராயணனை ஆழ் வார்கள் பாடுகிறார்கள். பிரபஞ்ச மயக் கத்தில் உழலும் நெஞ்சினை இறைவன் பால் திருப்பி திரிகரண சுத்தியோடு

வழிபடுவதற்கான வழிகளை அருளாளர்கள் தங்கள் பாடல்களின் ஊடாகப் பல இடங்களில் வெளிப்படுத்தியுள்ளார்கள். "வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே" என்றும் துணையிலி பிண நெஞ்சே" என்றும் மணிவாசகனாரும்" கெடுவாய் மனனே" எனக் கந்தர் அநுபூதியில் அருணகிரியாரும் "துயரறு சுடரடி தொழுதெழு மனனே" என நம்மாழ்வாரும் தங்கள் பாடல்களில் மனத்துக்கு உபதேசம் செய்யும் பாடல்களைப் பாடியுள்ளார்கள். இறைவன் வந்திருந்து அருள் புரியக்கூடிய புனித இடமாக நமது அகத்தை நாம் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். என்பதைப் பின்வரும் தமிழ் மந்திரப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

கடல் உடையான் மலையான் ஐந்து பூதத்து
உடல் உடையான் பல ஊழி தொறும் ஊழி
அடல் விடை ஏறும் அமரர்கள் நாதன்
இடம் உடையார் நெஞ்சத்து இல்லிருந்தானே

"பல வகையான செல்வங்களுள் செவிச் செல்வம் என்பதும் ஒன்றாகும் செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்" என்பது வள்ளுவர் வாக்கு ஆகும். காதாற் கேட்டு நல்ல விடயங்களை அறிந்து கொள்வதைச் "செவிநுகர் கனிகள்" எனப் பண்டிதமணி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். காது இருந்தும் நல்ல சொற்களைக் கேளாதவர்கள் செவிடர்கள். சொல்பவர்களுடைய அறிவு, அவர்களுடைய ஆற்றல், அவர்களுடைய ஆன்மீக வளர்ச்சி என்பவற்றை வெளிப்படுத்தும் ஊடகமாக அவர்களின் வாயால் வரும் சொற்கள் அமைகின்றன. "சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தஞானச் செல்வர்களின் வாயில் இருந்து வரும் வார்த்தைகள் யாவும் மந்திரங்களாகவே உள்ளன. நல்ல விடயத்தை நல்லவர்கள் வாயினாலே கேட்பதனால் ஆன்மீக பலத்தை நாம் பெற்றுக் கொள்ளலாம். இதனைத் தான் "கற்றிலனாயினும் கேட்க" என்ற முதுமொழியும் எடுத்து விளக்குகிறது. ஞானநூல்களைக் கேட்கின்றபோது பக்தி சிரத்தையுடன் கேட்க வேண்டும். அப்படிக் கேட்ட பின்னர் சிந்தனை செய்து பார்க்கவேண்டும். ஞானத்தைப் பெறுவதற்கான படிமுறைகளாகக் கற்றல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்பன கூறப்பட்டுள்ளன. முன்னைய காலத்தில் அரசர்கள், பிரபுக்கள் நல்ல கல்வி ஞானமுள்ளவர்களைத் தங்களது சபையிலே வைத்துக்கொண்டு அவர்கள் வாயிலாகப் பல நல்ல விடயங்களைக் கேட்டுப் பயன் அடையப் பெற்றனர்.

அறநூல்கள் கூறுகின்ற நல்லுரைகளைக் கேட்டும் அந்தணரின் அறிவுரைகளைக் கேட்டும், பாவங்கள் இவை என்று சொல்லும் நீதி நூல்களைக் கேட்டும், தேவர்களின் மந்திர ஒலிகளைக் கேட்டும் மற்றைய சமய நூல்களிற் கூறப்பட்டுள்ள நல்ல அறிவுரைகளைக் கேட்டும், பொன் போன்ற மேனிப் பொலிவுடைய எம்பெருமானின் தன்மையைக் கேட்டும் அறிய முடியாத பேரருள் திறத்தை அறிந்து கொண்டவர்களுக்குச் சிவப்பேறு கிட்டும்.

அறம் கேட்டும் அந்தணர் வாய்மொழி கேட்டும்
மறம் கேட்டும் வானவர் மந்திரம் கேட்டும்

**பேராசை முடிகிற இடத்தில் சந்தோஷம் தொடங்குகிறது.**

புறம் கேட்டும் பொன் உரை மேனி எம் ஈசன்
திறம் கேட்டும் பெற்ற சிவகதிதானே

மெய்ப்பொருள் அறிவு இல்லாதவர்களோடு உறவு கொள்வதே தகாது என்கிறார் திருமூலர். படித்தும் மெய்யறிவு அடையாதவர்கள் மூடர்களே ஆவார்கள். இத்தகைய மூடரைக் காட்டிலும் கல்லாதார் அதாவது படிப்பே இல்லாதவர்கள் மேலானவர்களாக உள்ளார்கள். இறைவனைப் பற்றிய கல்வியே மெய் அறிவாகும். இறையுணர்வை ஏற்படுத்தக்கூடிய கல்வியைக் கற்காத மூடர்களின் அறிவு கேடு விளைவிப்பதாகும். அறிவற்ற மூடர்களுக்கு அவர்களைப் போன்ற அறிவில்லாத மூடர்களே நல்லவராக நண்பராகத் தெரிவார்கள். கல்வி அறிவு ஞானம் இல்லாதவர்கள் மெய்ப்பொருள் உண்மையை அறியவேமாட்டார்கள்.

கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்டல் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாதர் மூடர் கருத்தறியாரே

தனக்குக் கேடு வருவதாயிருந்தாலும் ஆக்கம் வருவதாயிருந்தாலும் நடுவு நிலைமையினின்றும் ஒருவன் தவறக்கூடாது. நமது வாழ்க்கையில் நன்மையும் தீமையும் வருவது இயற்கை. அதை நாம் நேர்நின்று சரிக்கட்ட வேண்டுமே தவிர அதற்காகப் பிழையான வழிகளிலே செல்லலாகாது. அதற்காகநடுவு நிலைமையைக் கைவிடுதலும்ஆகாது.

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி

என்றே தமிழ் மறையாகிய திருக்குறளும் கூறுகிறது.

நடுவு நிலைமை தவறிப் பொருள் ஈட்டினால் அப்பொருள் பின்வரும் சந்ததிகளுக்கு நன்மையைத் தராது ஒழிந்து விடும்.

திருமந்திரத்தில் வரும் நடுவு நிலைமை என்னும் அதிகாரமானது முத்தி நெறியைப் பெறுவதற்குரிய சாதனாமார்க்கங்களில் ஒன்றாகிய யோகநெறியைப் பற்றிக் கூறுகிறது. நமது உடம்பில் உள்ள நாடிகள் இருபத் தோராயிரம் (21000). அவற்றுள் சிறந்தவை பத்து. இவற்றைத் தசநாடி என அழைப்பர். இவற்றிலும் இடைநாடி, பிங்கலைநாடி, சுழுமுனைநாடி என்ற மூன்றும் பேரின்பத்தைப் பெறுவதற்குரிய நாடிகள் ஆகும். இடைநாடி, பிங்கலநாடிகள் சிற்றின்பத்தை அனுபவிப்பதற்குரிய கருவிகளாகும். இடைநாடி சந்திரகலை, பிங்கலைநாடி சூரியகலை, சுழுமுனைநாடி செந்தீக் கலை. இடைபிங்கலைகளின் வழியே இயல்பாய் இயங்கும் வளியை நிறுத்திச் சுழுமுனையாகிய நடுநாடியின் ஊடே செலுத்தினால் பேரானந்தத்தைப் பெறலாம். அட்டமாசித்திகளும் தாமே வந்து கைகூடும். நடுநாடியின் வழியே நிற்கும் இந்த நிலையை நடுவுநிலை எனத் திருமந்திரம் கூறுகிறது.

நடு நாடியாகிய சகஸ்சாரத்தில் விளங்கும் ஒளியை அறியாதவர்களுக்கு ஞானம் கிட்டாது. நடுவான சகஸ்ராரத்தில்

**எதை நாம் அறியவில்லையோ, அது நம்முடையதன்று.**

நிற்பவர்களுக்கு நரகம் கிட்டாது. இவ் வாறு நிற்பவர்கள் தெய்வ வடிவம் பெற்று விடுவார்கள். தவம், யோகம் போலவே நடுநிலை தவறாது நிற்பதும் உயர்ந்த ஞானமார்க்கம் என்பதைத் திருமூலர் பின்வரும் பாடலின் ஊடாக உணர்த்து கின்றார்.

நடுவு நின்றார்க்கு அன்றி ஞானம் இல்லை
நடுவு நின்றார்க்கு நரகமும் இல்லை
நடுவு நின்றார் நல்ல தேவரும் ஆவர்
நடுவு நின்றார் வழிநானும் நின்றேனே

சக்தியை முழுமுதற் கடவுளாக வழிபடும் சாக்த மதப்பிரிவினருள் ஒரு பகுதியினர் வாமசார வழிபாட்டு நெறி யினைப் பின்பற்றுபவர்களாக இருக்கிறார் கள். இந்த வழிபாட்டு நெறி பெரும்பாலும் வட இந்தியாவிலேயே நிலவி வருகிறது. இவர்கள் மது மாமிசம் படைத்துத் தங்கள் வழிபாட்டினைச் செய்து வருகிறார்கள். சக்தியின் அருளை வேண்டிப் பஞ்சமகா நெறியைப் பின்பற்றும் சாக்தர்கள் மது பானமாகிய கள்ளை அருந்துகிறார்கள். இவர்கள் கள் உண்டு களித்துத் தம்மை மறப்பதால் உடற்சக்தி, உணர்வு என்பன அழிந்து தாம் அம்பிகையிடம் வேண்டிப் பெற்ற அருட்சக்தியையும் இழந்து விடு கிறார்கள். சக்தி என்பது சிவஞானத்தை அறிந்து அதில் ஈடுபட்டுச் சத்திய ஞான ஆனந்தத்தை அடைதலே ஒழிய கள் ளைக் குடித்துக் களிப்பதில் இல்லை என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

சக்தியை வேண்டிச் சமயத்தோர் கள் உண்பர்
சக்தி அழிந்தது தம்மை மறத்தலால்
சக்தி சிவஞானம் தன்னில் தலைப்பட்டுச்
சத்திய ஞான ஆனந்தத்திற் சார்தலே.

(தொடரும்..

### அறநெறிச் சிந்தனை

## பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பு

உழைப்பது ஒருவன் என்றால்
உண்டு மகிழ்வது வேறொருவன்
இழைக்கும் அநீதியை எடுத்துரைக்க
இயலு மானவரை போராடு
அழைத்துண் காக்கை போல
அனைவர்க்கும் பகிர்ந்த ளித்துப்
பழைய கொள்கையை விடுத்துப்
பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பு

*கவிஞர் வ. யோகானந்தசிவம்*

சரியான நேரத்தைத் தேர்ந்தெடுப்பது நேரத்தை மிச்சப்படுத்தும்.

உ

# போற்றிப் பாடி வழிபட்டு உய்வோமாக

## திரு ஐ.கோ. சந்திரசேகரம் அவர்கள்

"ஆடும் பரிவேலணி சேவலனெப் பாடும் பணியே பணியாய் அருள்வாய் தேடும் கயமாமுகனைச் செருவிற் சாடும் தனியானை சகோதரனே" என அருணகிரிநாதர் முருகப்பெருமானின் நிலையைக் கந்தரநுபூதியிற் பாடினார். அந்த அநுபூதியின் முதற்பாடல் இது. இங்கு அருணகிரியார் எதைக் கேட்கிறார் என்றால் எனக்கு பொன், பொருள் தா என்று கேட்கவில்லை உன்னைப் பாடும் பணியை எனக்குத் தா என்றே கேட்கின்றார்.

நம்முடைய வழிபாட்டு முறைகளில் வரலாற்றுக்கு முற்பட்ட காலமாகிய சிந்துவெளி நாகரிக காலத்திலேயே பாடி வழிபட்டமைக்கான சான்றுகளை சேர் ஜோன்மார்ஷல் போன்றோர் குறிப்பிடுகின்றார்கள். வேத காலத்தில் இருக்கு வேத மந்திரப் பாடல்களே. தேவர்களைப் போற்றித் துதிக்கும் பாக்கள் இவை இன்றும் நம்முடைய ஆலயங்களில் ஒலித்துக் கொண்டு தாம் இருக்கின்றன. மேலும் சாமவேதம் இசையோடு பாடப்படவேண்டுமென்பதை இசை நுணுக்கங்கள் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளன.

சிவாகமங்களை நோக்குவோமாயின் அங்கும் பாடும் பணி நன்கு சொல்லப்பட்டிருக்கின்றது. சிவாலயத்தில் நடைபெறும் சோடோபசாரங்களில் பூஜையின் ஒரு அங்கமாகத் தோத்திரம் இடம் பெறுகிறது. இதனாலேயே வடமொழித் தோத்திரமாகிய வேத பாராயணத்தைத் தொடர்ந்து தமிழ் வேதமாகிய தேவார பாராயணம் இடம்பெற்று வருகிறது. இவை இரண்டுக்குமிடையில் ஆசீர்வாதத்தைச் சொருகக்கூடாது என்று இன்றும் சைவச் சான்றோர்கள் கூறிவருகின்றார்கள். கொடியேற்ற, கொடியிறக்கம் போன்ற காலத்தில் நவ சந்திகளிலும் பண்ணிசைக்கப்படுகிறது. உண்மையில், இன்று பல ஆலயங்களில் குறிப்பிட்ட பண் பாடுகின்றார்களா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இவை இறைவனைப் பாடி வழிபடவேண்டும் என்பதை நமக்குத் தெளிவுபடுத்திக் காட்டுகின்றன. புராணங்களிலும் தோத்திரம் என்ற ஒரு வழிபாட்டு முறையைக் கூறியிருக்கக் காணலாம். தேவர்கள் தங்களுக்குத் துன்பம் வருகின்ற காலத்தில் சிவனைப் போற்றிப் பாடல்கள் பாடித் துதித்தார்கள். இன்று புறச் சமயத்தவர்கள் நமது சொத்தைத் திருடித் தாமும் பயன்படுத்துகின்றனர். ஆனால் எங்களுடைய இறைவனது தோற்றப் பொலிவுகள் பொருந்திய பாடல்கள் பாடவேண்டும். அவற்றிற்குரிய இசைக் கருவிகள் இசைத்து மெருகூட்டப்படவேண்டும் என்பதைக் காட்டி நிற்கின்றன. சிவன் வீணா தெட்சணாமூர்த்தியாகக் கையில் வீணையுடனும், நடராஜராகக் கையில் உடுக்கையுடனும், உமை சரஸ்வதியாகக் கையில் வீணையுடனும், கிருஷ்ணன் கையில் புல்லாங்குழலுடனும், பல தெய்வங்கள் கையிலே சங்குடனும் காணப்படுவதும் நந்திதேவர் மிருதங்கம் வாசிப்பவராகவும், நாரதர் தம்புரா மீட்டுபவராகவும் இருப்பதும் இவ்வுண்மையை நன்கு புலப்படுத்திக் காட்டுகின்றன. மேலும் சங்கமருவிய காலத்தில் வாழ்ந்த

**தொடர்ந்து செய்யப்படாத முயற்சி தோல்வியையே தரும்.**

காரைக்காலம்மையார் எனும் புனித வதியார் நான் உன்னை மகிழ்ந்து பாடி உன்னடியில் இருக்கவேண்டும் எனக்கேட்டுத் திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம், அற்புதத் திருவந்தாதி என்பவற்றைப் பாடினார். பல்லவர் காலத்தில் வாழ்ந்த நாயன்மார்கள் சிவனைப் போற்றிப் பாடுவதையே பணியாகக் கொண்டு பாடினார்கள். "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன் "தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்" "பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடவேண்டும்" நெக்குருகி ஆட வேண்டும்..." என்னும் நாயன்மார்களின் வாசகங்கள் நாம் இறைவனைப் பாடி வழிபடவேண்டும் என்பதைக் காட்ட வில்லையா?

3000 திருமந்திரப் பாடல்களைப் பாடிய தவயோகி திருமூலர் "என்னை இறைவன் எதற்காகப் படைத்தான் என்றால் நம்மைப்போல் கன்மவினையின் பயனை அனுபவிக்க அல்ல. தன்னைத் தமிழாற் பாடும்படி எனத் தன் திருமந்திரத் திலேயே பின்வருமாறு கூறுகின்றார்.

"பின்னை நின்றென்ன பிறவிபெறுவது
முன்னை நன்றாக முயல் தவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

ஒரு சமயம் மார்கழித் திருவாதிரை நாளில் சிதம்பரத்தில் தில்லை நடராஜப் பெருமானின் தேரை எல்லோரும் இழுத்தும் தேரோடவில்லை. அவ்வேளை எங்கிருந்தோ வந்த சிவனடியார் சேந்தனார் "மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள் வஞ்சகர் போயகல" எனத் திருப்பல்லாண்டு பாடிய வேளையிலே தேர் ஓடியதல்லவா? இவை எல்லாம் எதைக் குறிக்கின்றன என்றால், நாம் இறைவனைப் போற்றிப் பாடவேண்டும். இதுவும் ஒரு சுலபமான வழிபாட்டு முறை என்பதைக் காட்டுகின்றன,

சிவன் தான் விரும்பியே ஞானப் பாலைக் கொடுப்பித்துச் சம்பந்தரைப் பாட வைத்தான். சூலை கொடுத்து நாவுக்கரசரைப், பாட வைத்தான். "நாவுக்கு அரசு" எனப் பட்டமும் கொடுத்தான். ஓலை கொடுத்துச் சுந்தரரைப் பாட வைத்தான் இது மட்டுமா? திருவாசகம் தந்த மணிவாசகரையே குருந்த மரநீழலில் ஆட்கொண்டு பாடவைத்தானே. பாடமுடியாது தடுமாறிய சேக்கிழாருக்குத் தில்லை நடராஜப் பெருமான் "உலகெலாமுணர்ந்து ஓதற்கரியவன்" என்று அடியெடுத்துக் கொடுத்துப் பெரிய புராணத்தையே பாடவைத்தானே. முருகப் பெருமான் காஞ்சி குமரக்கோட்டத்துக் கச்சியப்ப சிவாச்சாரியாருக்குத் "திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்" என்று அடியெடுத்துக் கொடுத்துக் கந்தபுராணத்தைப் பாட வைத்ததுமன்றி அருணகிரிநாதர் வாழ்க்கை முடித்துக் கொள்ள எண்ணிய வேளை முருகப்பெருமான் அவரைத் தாங்கி "முத்தைத் தரு பத்தித்திருநகை அத்திக்கிறை சத்திச் சரணவண முத்து" என அடியெடுத்துக் கொடுத்து 36 ஆயிரம் திருப்புகழைப் பாட, வைத்தானே. அத்தோடு கந்தரலங்காரம், கந்தரநுபூதி, வேல் விருத்தம், கந்தரந்தாதி எனப் பாட வைத்தானே. இவையெல்லாம் இறைவனைப் பாடி வழிபடவேண்டும் என்பதைக்

காட்டுகின்றன அல்லவா.

நாயன்மார்கள் பாடிய தேவாரங்கள் எத்தனை எத்தனையோ அற்புதங்களைச் செய்தன கண்ணினாலுமைக் காணக் கதவினைத் திண்ணமாகத் திறக்கச் சொல்லித் திறப்பித்தமை, நல்விழாக்கள் காணாதே போதியோ பூம்பாவாய் என எலும்பைப் பெண்ணாக்கியமை, பையவே சென்று பாண்டியற்காகவே எனச் சமணர் இட்ட தீயைப் பாண்டிய மன்னனுடலிற் புகச்செய்து வெப்பு நோயாக்கியமை, வேந்தனும் ஓங்குக எனப் பாண்டிய மன்னனின் கூன் போக்கியமை அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்சவருவதுமில்லை என மத யானையை வழிபடச் செய்தமை, மற்றக்கண்தான் தாராதொழிந்தால் வாழ்ந்து போதிரே எனப் பாடிக் கட்பார்வை பெற்றமை எனப் பலவற்றைக் காண்கிறோம்.

பகழிக்கூத்தர் தீராத வயிற்று வலியாய் இருந்து வைத்தியங்கள் பல செய்தும் மாறாத போது முருகனைச் சென்று வழிபட்டார். முருகனைப் பிள்ளைத் தமிழாற் பாடினார். வருந்தியழைத்தால் வாராதிருக்க வழக்குண்டோ என்றதும் முருகன் வந்தான். வயிற்றுவலி போக்கினான் அல்லவா? நக்கீரர் குகைக்குள்ளே தன்னோடு இருந்த 999 பேரையும் விடுவிப்பதற்காகத் திருமுருகாற்றுப்படை பாடி அக்குகையையே துகளாகச் செய்தாரல்லவா? இப்படிப் போற்றிப் பாடி வழிபட்டு வரம் பல பெற்ற அடியார் வழி நின்று நாமும் உய்வோமாக.

## "மண்ணுலகு என்றென்றும் போற்றுமே"

அள்ளவே குறையாத அட்சய பாத்திரம்
ஆற்றங்கரையிலே உண்டு,
ஆலிலையிலே வைத்து அன்னம் படைக்கின்ற
அற்புதமும் அங்கே யுண்டு,
உள்ளவே எளியனாம் வடி வேலனுக்கு
உவப்பான காட்சி யுண்டு,
என்னுள்ளம் கேட்கின்ற அத்தனையும் கிடைக்கின்ற
ஏராளம் வரங்களுண்டு,

வள்ளலே! வள்ளியும் தெய்வயா னைமகிழ்
வடிவழகா! ஷண்முகா!
வாரந் தோறும் நினது திருவருள் பாலிக்க
வணங்குவேன் வென்றிடுவேன்,
வெள்ளியில் சந்நிதி ஆச்சிரமம் காட்டிடும்
வெல்லும் அறச்செயலெலாம்,
விண்ணுலகு மண்ணுலகு என்றென்றும் போற்றுமே
வேதனை இனியில்லையே.

*கே. எஸ். சிவஞானராஜா*

**மரணத்திற்கு அஞ்சாதவனே வாழத் தகுதி பெற்றவன்.**

உ

(தொடர்ச்சி...

# மனித ஆளுமையில் இசையின் பங்கு

செல்வி ச. சரவணமுத்து அவர்கள்

அழகியலையும் உளவியலையும் தொடர்புபடுத்தும் பொழுது இந்த முன் பொழிவை மறந்துவிட முடியாதுள்ளது. தனிமனித நடத்தைகளை விளக்குவதில் முதன்மைபெறும் உளவியல் முழுமனிதத் தொடர்புகளையும் தனித்து விளக்க முடியாத முதிரா நிலையில் நிற்கின்றது.

தனிமனிதனுக்குரிய குணமும் தனித்துவமும், ஏக்கமும், இரக்கமும், சமூகத்தொடர்புகளினாலும் வரலாற்றினாலும் தீர்மானிக்கப்படுகின்றன. ஒவ்வொரு விதமான சமூக ஆக்கமும் அதற்கென உரிய மனித தத்துவங்களை மலர்விக்கின்றன. வரலாற்றுப் பொருள் முதல்வாத ஆதாரத்திலிருந்து இவ்வாறுதான் ஒரு தொழிலாளியின் உளப்பண்பு அமையும் என்று அவனை ஓர் அச்சுப்பிரதி போன்று அமைத்தல் பொருந்தாது. வரலாற்றுப் பொருள் முதல்வாதம் தொழிலாளியின் உளச்செயற்பாடுகளை அறிவதற்குரிய தருக்கமாக அமைகின்றது என்பதை ஆளுமையிலும் இசையிலும் வற்புறுத்த வேண்டியுள்ளது. அது தருக்கமே அன்றி, செங்கோல் செலுத்தும் ஆசான் அன்று.

தனிமனித நடத்தைகளை விளக்குவதில் உளவியலை முற்றிலும் புறக்கணித்து விடமுடியாது. உளநெருக்குவாரங்களைத் தணித்தல்,.விருப்பங்களை நிறைவேற்றுதல் என்ற இரண்டு இயக்கச் செயன்முறைகளும் மனிதனிலே செயற்பட்ட வண்ணமிருக்கும் தேவைகளிலிருந்து செயற்பாடுகள் உருவாகும். செயற்பாடுகள் மீண்டும் தேவைகளை உருவாக்கும்.

மார்க்சாயிஷம் தேவைகளை அடிநிலையாகக் கொள்ளாது உழைப்பை அடிநிலையாகக் கொள்ளுகின்றது. உழைப்போடு இணைந்தது உற்பத்தி. உற்பத்தியின் வழியாகவே நுகர்ச்சித் தேவைகள் உருவாக்கப்படும். முதலாளித்துவ சமூகங்களில் வாழ்க்கையிலிருந்து உற்பத்தி வழிமுறைகள் பிரித்து வைக்கப்படுகின்றன. இதனால் உற்பத்திச் செயற்பாடுகள் அந்நியமாக்கப்படுகின்றன. ஒருவன் தன்னைப் பூரணமாக வெளிப்படுத்த முடியாத நிலையிலே தவிக்கின்றான். இந்நிலையிலே "தேவை தணித்தல்" என்ற சுருங்கிய நிலையில் மனிதனது செயற்பாடுகள் நிகழ்கின்றன.

கல்வியானது மக்களுக்கு ஒழுக்கத்தினை அளிக்கவல்லது. எனவே கலைகளை நாம் கற்கும் போது ஒழுக்கம் நமக்கு உண்டாகின்றது. இதனால் கலாச்சாரங்களைப் பின்பற்றி நடக்கிறோம். இதனாலே நமது நிலை உயர்ந்த படிக்கு வரும். இதன் வழியாக நாம் இறைவனை அடைவதற்கும் ஆளாகமுடிகிறது. இதைவிட ஆன்மஈடேற்றத்திற்கும் ஞானவளர்ச்சிக்கும் இசைமுக்கியமானதாகும். கலை என்னும் போது பல விதக்கலை உண்டு. ஆனாலும் சங்கீதக் கலையான இசையானது கற்றவர், கல்லாதவர் விலங்கினம் யாவற்றையும் இசைமயக்கத்தில் கலங்கச் செய்ய வல்லது பொதுவாக இசைக்கு மயங்காத உயிரினங்கள் உலகில் இல்லை எனலாம்.

தற்பொழுது ஆராய்ச்சியாளர்களின் ஆராய்ச்சியில் தாவரங்களும்

அமைதியான மனம் மனிதன் அடையும் பெரும் பாக்கியம்.

இசையினை நன்கு வளர்க்கின்றன என்பது யாவருக்கும் தெரிந்ததே. இக்கூற்றினை நம்முன்னோர்களும் கூறியுள்ளனர். குறுந்தொகையில் கூறப்பட்ட "முல்லை வரி வுண்டுதலாய் நெகிழ்ந்தனவே" என்னும் பதமானது இசையின் தன்மையினை விபரிக்கின்றது. அதாவது இசைக்குருகான் எதற்கும் உருகான், எதற்கும் உருகாதவன் இசைக்கு உருகுவான்" என்பதே ஆகும்.

இசையினைக் கற்பதனால் கிரகித்தல் தன்மையானது விருத்தியடைகின்றது. இசைப் போட்டிகளுக்கு செல்வதனால், தன்னம்பிக்கையும், உற்சாகமும், அச்சம் இன்மையும், துணிவும் பிறக்கின்றது. இத்துடன் தலைமைத்துவமும் வளர்கின்றது இதனால் மனித ஆளுமையானது இசை கற்பதனால் மேலும் வளர்வதற்கு உறுதுணையாகின்றது. இசை என்ற பாடற்பரப்பின் மூலமாக சிறப்பான ஆளுமை அபிவிருத்திக்குத் தேவையான நோக்கங்கள் நிறைவேறும் என்பது தெளிவு.

(முற்றும்)

**பல்லவி**

பாராமுகம் ஏனய்யா - முருகா
தீரா வினைகள் தீர்த்திட வாராய்
(பாராமுகம்)

**சரணம்**

ஈழத்தில் பிறந்த நாம் இன்னல்கள் அடைகின்றோம்
ஈவிரக்கம் இன்றி எம்மை நாம் அழிக்கின்றோம்
பாவபுண்ணியங்கள் பார்ப்பவர் யாருமில்லை
ஏனிந்த வாழ்வையா எம் துயர் தீராயோ!
(பாராமுகம்)

மனித உயிரினங்கள் மாளுது இப்புவிதன்னில்
மாண்டவர் மீள்வாரோ மானுடம் தளைக்குமோ
விலையில்லா உயிர்தன்னை விற்பவர்களும் உண்டு
விதிவழி தான் வாழ்க்கை என்ற உன் கட்டளையோ!
(பாராமுகம்)

நோய் நொடி வாராது காக்கின்ற உடல்தன்னை,
நொடிப்பொழுதினில் இங்கே சிதற அடிக்கின்றார்
உயிர்களிலே உயர்வு தாழ்வு ஏதும் உண்டா?
உணரவைப்பாய் ஐயா உன் கிருபையாலே!
(பாராமுகம்)

ஓடும் உதிரத்திலும் நாடி நரம்பினிலும்,
பாகுபாடு பார்க்கும் மனிதம் தான் வாழுதையா,
ஓதி இன்புற்றுவாழ ஒருவர் இங்கு இல்லை ஐயா
ஒரு போதும் எம் துயர் களையாயோ சொல் ஐயா!

*திருமதி ஆனந்தராணி நாகேந்திரன்*

உ

# முன்னோர் சொன்ன கதைகள்

## திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்

'நன்றும் தீதும் பிறர்தர வாரா' என்பார்கள். நமது வினைப்பயனே நமக்குக் கிடைக்கிறது. நல்லவற்றைச் செய்தால் நல்லவையே நமக்கும் கிடைக்கும். அல்லவற்றைச் செய்தால் அதன் பயனும் அப்படியே அமையும். எமது வினைப் பயன்களில் நாம் அனுபவித்தவை போக எஞ்சியவை அடுத்த பிறவியிலும் தொடர்கின்றன. இந்தப் பயன்களாகவே அதிக முயற்சியுள்ளவருக்குக் குறைந்த வருவாயும் குறைந்த முயற்சி செய்தவருக்குக் கூடிய வருவாயும் கிடைக்கின்றன. நமது வாழ்வில் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள், கிட்டும் அதிஷ்ட துரதிஷ்டங்கள் போன்ற அனைத்திற்குமே முன்னரும் தற்பொழுதும் நாம் செய்த, செய்யும் செயல்களே காரணமாகும்.

இக்கருத்தை ஒப்ப மறுப்போரு முள்ளனர். ஆனால் மனித வாழ்வில் நடைபெறும் நிகழ்வுகளைப் பார்க்கும்போது இதனை ஏற்கவேண்டியுள்ளது. கஷ்டப்படும் ஒருவரின் துயர்தீர்க்க மற்றவர்கள் உதவினாற்கூட அவருக்கு வேறொரு துன்பம் வருகிறது. வாழ்க்கை துயர் நிறைந்ததாகவே அவருக்கு அமைந்து விடுகிறது. ஒருவருக்குத் திட்டமிட்டுத் துன்பம் செய்யும்போதும் அது அவரைப் பாதிக்காது போய்விடுகிறது. சிலசமயம் நன்மையாகக்கூட அமைந்துவிடுகிறது. எனவே நம்மைச் சூழவும் நமக்கும் நடக்கும் பல நிகழ்வுகளுக்கு, புலப்படாத ஏதோ ஒன்றிருப்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டியுள்ளது.

ஒரு விதை நிலத்தில் வீழ்ந்து முளைத்துப் பல்கிப் பெருகுகிறது. மழையோ, வெயிலோ, புயலோ விளைந்து கிடக்கும் வயலையோ தோட்டத்தையோ நாசமாக்கியும் விடுகிறது. இதே போன்று நமது வினைப்பயனும் பெருகலாம் அல்லது அழியலாம்.

உணவிலே அதன் சுவையைக் கூட்டும் பொருளை இடலாம். அதை உண்ணமுடியாத வகையில் சுவை குன்ற எதையாவது போடலாம். உண்டவரின் உயிர் குடிக்கும் விஷத்தையும் கலக்கலாம். நாம் செய்தது உணவில் ஒரு பொருளைக் கலக்கும் செயலென்றாலும் அதன் தன்மைக்கேற்ப வினைப்பயனும் அதிகரிக்கும்.

வினைப்பயனை நாம் அனுபவித்தேயாகவேண்டும். அது அதிகரிக்கவுங் கூடும். அதற்கேற்ற பிராயச்சித்தம் செய்தால் அது குறையவும் வாய்ப்புண்டு என்ற கருத்தை எமக்கு விளக்குவதற்காகக் கூறப்பட்ட கதையொன்றைப் பார்ப்போம்.

தனது ஆச்சிரமத்திற்கு வந்த முனிவரை உபசரித்து ஆச்சிரமவாசியான முனிவர் உணவளித்தார். அவரது மகனும் உணவருந்திக்கொண்டிருந்த முனிவரின் அருகே அமர்ந்து விளையாடிக் கொண்டிருந்தான். விளையாட்டாக ஒரு கல்லை உணவிற்குள்ளே போட்டுவிட்டான். அதைக் கவனிக்காது முனிவர் உணவுடன் கல்லையும் உண்டுவிட்டார்.

உணவருந்தியவர் விருந்தினர். அத்துடன் முனிவர் அவரது உணவில் கல்லைக் கலப்பது தவறல்லவா?

முனிகுமாரன் வளர்ந்து தந்தை

யைப்போன்றே மாதவமுனிவனானான். ஒருமுறை அவன் தேவலோகஞ்சென்றான். நம்வினைகளைப் பார்த்திருக்கும் அறக் கடவுளின் உலகில் ஒரு பெரிய பாறை யிருந்தது. "இது ஏன் இங்கிருக்கிறது?" என அவன் அறக்கடவுளிடம் கேட்டான். "நீ சிறுபிள்ளையாக இருந்தபோது விருந் தினராக வந்த முனிவரின் உணவில் இட்ட கல் இப்படி வளர்ந்து கொண்டிருக்கிறது. உனது வாழ்நாள் முடிந்து இங்கு வரும் போது இதை நீ உண்ணவேண்டும்" என அறக்கடவுள் பதிலளித்தார்.

இதைக்கேட்ட அவன் திகைத்து விட்டான். தான் செய்த தவறை உணர்ந் தான். "அதிதிக்குக் கல்லை உண்ணக் கொடுத்த நான் கல்லை உண்ண வேண்டும்" என்று முடிபெடுத்தான். பூவுல கிற்கு வந்ததும், நான் கண்ட பாறையைப் போன்ற ஒரு பாறையைத் தேர்ந்தெடுத்து அதை ஒவ்வொரு நாளும் இடித்துக் கரைத்துக் குடித்துவந்தான். அந்தப் பாறையைக் குடித்து முடித்ததும் தேவ லோகத்திலிருந்த பாறையும் மறைந்து விட்டது. கல்லை உணவாகக் கொண் டிருந்ததனால் அவனுக்குச் சிலாதனர் என்ற பெயரேற்பட்டது. திருநந்திதேவர் சிலாதனர் செய்த புத்திரகாமேஷ்டி யாகத்தில் அவதரித்தவராவார்.

இக்கதையைக் கேட்டுவிட்டு, பாறையை உடைத்துக் கரைத்துக் குடிப் பது நடக்கக்கூடியதா? எனச் சிந்திக்கக் கூடாது. அது கூறும் கருத்தை உணர வேண்டும். சிறுவர்கள்கூடத் தவறுசெய்யக் கூடாது என்ற எண்ணம் ஏற்படும்போது தான் சிறுவர்கள் திருந்தி நடப்பார்கள். சிறுவயதுதானே என்று தவறுகள் செய்ய அனுமதித்தால் அவர்களோடு தவறும் வளர்ந்து தீயவழிக்கு அவர்களை அழைத் துச் சென்றுவிடும். கண்டித்துத் திருத்து வதைவிடக் கதைகளால் திருத்துவது சுலபம். நல்ல கருத்துக்களை மனங் களிலே பதிய வைக்கவே முன்னோர் இக்கதைகளைக் கூறியுள்ளனர்.

---

நியாயமான முறையில் சம்பாதித்த பொருளை கொடுக்கத் தகாதவருக்குக் கொடுப்பது, தகுந்தவர்க்கு கொடாதிருப்பது ஆகிய இரண்டுமே தவறு!

தானங்களில் சிறந்தது அன்னதானம். அதிலும் சிறந்தது கோதானம், பூதானம், அவற்றிலும் உயர்ந்தது கல்வி தானம்!

மனத்தில் இறைவனின் திருவுருவும், வாக்கில் இறைவனின் பெயரும், உணவாக இறைவனின் பிரசாதமும், அபிஷேக தீர்த்தமும் கொண்டவன் அச்சுதனுக்குச் சமமானவன்.

முன் பார்க்கப்படாமலும், அறிவித்துக் கொள்ளாமல் யதேச்சையாக வருபவர்களே அதிதிகள். அவ்வாறு களைப்புடன் வந்த அதிதியை இன்முகத்தோடு உபசரிப்பவன், ஒரு காளையுடன் நூறு பசுமாடுகளை தானம் செய்த பலனை அடைகிறான்.

தீபத்தை புருஷர்கள் அணைப்பதும், பூசணிக்காயை பெண்கள் உடைப்பதும் வம்சத்தை அழிக்கும் வழிகளாகும்.

பொருளை உணராமல் படிக்கும் கல்வியால் பயனேதுமில்லை. அந்தப் படிப்பு வெறும் சுமையே ஆகும்.

அன்னைக்கு நிகரான தெய்வமும், தந்தைக்கு சமமான குருவும் இல்லை. பணிவிடை செய்வதைத் தவிர, அவர்களின் கடனைத் தீர்க்க வேறுவழி இல்லை.

**வணக்கமுள்ளவன் உயர்நிலையை அடைவான்.**

உ

# வாரியார் சுவாமிகள் அருளிய

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் புராணம்

வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்

(திருப்புகழைத் திசையெல்லாம் பரப்பி, காது குளிர வரும் "கைத்தல ep் wfd ற்யை எத்தலத்திலும் இசைத்துப் பாடி, அடியார்கள் அனைவரையும் தம்முள் ஐக்கியப்படுத்திய அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் தமது 18-19 வயதில் (1925) பாடியதுதான் இந்த அருணகிரிநாதப் புராணம். 64வது நாயனாராக அனைவர் மனத்திலும் நிறைந்திருக்கும் அந்தப் பாவலர் பெருமானின் பொழிப்புரையின் பொலிவுகுன்றாது வசனநடையில் தர அடியேன் முயன்றுள்ளேன். செல்வச் சந்நிதிச் செவ்வேள் துணை நிற்பாராக)

அறத்தின் வழி நிற்கும் மகத நாட்டின் அழகுற விளங்கும் நகரம் "அருணை" எனப்படுகின்ற திருவண்ணா மலையாகும். பிரம்மாவும் திருமாலும் தேடியும் காணக்கிடைக்காமல் தீபச் சுடரான திருமலையைத் தன்னகத்தே கொண்டது அருணைத் தலம். அம்புலி சூடிய அரன், உண்ணாமுலையம்மை உடனிருக்க, நினைக்க முத்தி தரும் பதியே இந்த அருணையம்பதியாகும். அந்தணர் வீதி, வைசியர் வீதி, வேளாளர் வீதி, பொது மகளிர் வீதி எனப்பல வீதிகளைக் கொண்டது அந்நகரம்.

பரத்தையர், கணிகையர், உருத்திரகணிகையர் எனப் பொதுமகளிர் மூன்று வகைப்படுவர். கைப்பொருளைத் தந்தவனை அந்த நாளில் கணவனாக ஏற்று அணைத்து மகிழ்விப்பவர் பரத்தையர். ஆலயப்பணிகள் செய்யும் அடியார்களுக்கு எழும் இச்சையைத் தணிப்பவர் கணிகையர். தாமாக வலிந்து சென்று யாரையும் சேராத விரதம் கொண்டவர்கள் இவர்கள். வீட்டில் தலைமகளாகப் பிறந்து, பற்பல கலைகளிலும் தேர்ந்து, பார்வதி கணவனாக பரமேஸ்வரனின் தொண்டுக்காக எனப் பெற்றோரால் கோயிலிலேயே விடப்பட்டுக் கற்புடன் திகழ்பவர்கள் உருத்திர கனிகையர். மலரம்பு ஏந்தும் மன்மதனே எதிரே வந்தாலும் மனம் மாறாக் குணம் கொண்டவர்கள் இவர்கள். இத்தகைய உருத்திர கணிகையர் குலத்தில் பிறந்த "முத்தம்மை" சிவனையே சிந்தனை செய்து, இறைவன் பணி ஒன்றையே மனத்தில் நிறுத்தி வாழ்ந்து வந்தாள். சிவபெருமானின், திருமேனி தொடுதல், நிவேதனத்துக்கு அமுதம் அமைத்தல், மஞ்சனநீர் கொணர்தல் போன்ற செயல்களை நீக்கி, நாட்டியம் முதலான தொண்டுகள் செய்து பரமனையே தஞ்சமெனப் பணிந்து வரும் நாளில், வேல்கொண்டு வினை தீர்க்கும் வேலவன் தன் உள்ளத்தில் பின்வருமாறு எண்ணுகின்றான்.

"மண், பொன், பெண் எனும் ஆசையினாலே கட்டுண்டு மதிமயங்கி நிற்கும் இந்த உலகத்தை உய்விக்கும் பொருட்டு, ஓர் அறிவாளனை அவதரிக்கச் செய்து, அருந்தமிழ் கற்ற அவன் வழியில் நன்னெறிகளை வளர்ப்போம்" என்று கருதி நின்றான் கந்தவேள்.

ஒரு நாள் நள்ளிரவு வேளையில் சேவலும் மயிலுமாக, நெடிய வேலும் தாங்கியவண்ணம் அறுமுகனார் பேரொளிப் பிழம்பாய் முத்தம்மையின் கனவில் தோன்றி, "கற்பின் கலங்கரை விளக்கமே! உன் வயிற்றில் வானவரும் வணங்கி நிற்கும் வல்லமை மிக்க அற்புத மகவு ஒன்றை அவதரிக்கச் செய்வோம்" என்று கூறி மறைந்தனன். கனவு நீங்கிக் கண் விழித்த முத்தம்மை. "அருணகிரி ஐயனே" என அழைத்து, "உன் பணிவிடை ஒன்றே பாக்கியம் எனக் கருதி வாழும் எனக்குக், கரு உதித்தால் காரணம் கேட்பார்களே! தூய வழிவிட்டுத் தீய வழியில் நான் சென்று கருவுற்றதாக என் குலத்தார் என்னை நீக்கிவைத்தால் எனது ஆலயப் பணி தடைப்படுமே" எனப் பலவாறாகவும் சிந்தித்துக் கலங்கிப் பின், "முருகன் திருவடி என்றும் துணை நிற்கும்" எனச் சிந்தை தெளிந்தவளாக அருணாசலேஸ்வரர் ஆலயம் சென்று வணங்கிவிட்டுத் தன் கடமைகளை ஆற்றி வீடு திரும்பினாள்.

மாதமொருமுறை மாதருக்கு ஏற்படும் மாதவிலக்கு நின்றால் அது கர்ப்பம் என்கிற நியதிப்படி அடுத்த மாதமே முத்தம்மையின் உடல் மாற்றம் கருவுற்றதைக் காட்டி நின்றது. சுற்றத்தார் வார்த்தைகளாற் சுட்டெரித்து விரிவிலா அறிவினால் பழமொழிகளைப் பரிமாறி நின்றனர். நாட்கள் செல்லச் செல்ல விழிகள் குழி விழுந்து, இதழ்கள் ஒளிமங்கி, முகம் வெண்மதி என வெளுத்து, மேனி மெலிந்து நடை தளர்ந்து, ஆலிலை போன்ற வயிற்றில் இயற்கையான மாற்றங்கள் புலப்படலாயின.

மாதங்கள் ஐந்து ஓடி மறைந்தன. முத்தம்மை உடலில் ஏற்பட்ட மாற்றங்களை அவதானித்த ஊர் மக்கள் சார்பாக, ஒரு பெரியவர் முத்தம்மையை அழைத்துக் காரணம் கேட்க, அவளும் எதையும் மறைக்காது உண்மையைக் கூறி நின்றாள். உலக நியதிக்கு மாறுபட்ட இந்த உண்மை விளக்கத்தை ஏற்க மறுத்து, அவளது குல உரிமையைப் பறித்துத் தனிமைப்படுத்தினர் ஊர்மக்கள். அவளோ எதற்கும் கலங்காது ஆறுமுகநாதனையே துணையெனக் கருதி உபாசித்திருந்தாள். தனித்து விடப்பட்ட முத்தம்மை பழியோடு வாழ்வதிலும் இறப்பதே இனிது என முடிபெடுத்து விரைந்தவேளை, வேல் முருகன் அருளால் அவளுக்கு ஒருவித மயக்கம் உண்டானது. முருகன் முத்தம்மையின் கனவில் மீண்டும் தோன்றி, "அம்மையே கவலையை ஒழிவாய். நமது அருளால் நடக்கும் ஆடல் இது. எனவே அதனால் வருகின்ற விளைவுகண்டு அஞ்சாதே" என்று அருளிச் செய்தான். மயக்கம் நீங்கிய முத்தம்மை தெளிவு கொண்டு, "கந்தப்பெருமான் கருணை மிகுந்த இக்கருவைச் சுமக்க என்ன புண்ணியம் செய்தேன்" எனச்சிந்தை தெளிந்து நின்றாள். காலம் வளர வளரக் கருவும் வளர்ந்தது.

உயிராகவும் உணர்வாகவும், உருவாகவும் அருவாகவும், உளதாகவும் இலதாகவுமாகவுள்ள ஞானத்தின் இருப்பிடமான பன்னிருதோள் கொண்ட இளம் பூரணன் கருணையினாலே முத்தம்மை அழகிய ஒரு பெண் மகவைப் பெற்றெடுத்தாள். பூமியிலே பூத்த புது மலரைக் கையிலேந்தி "ஆதி" என்று பெயர்சூட்டி வளர்த்து வரலானாள். ஆண்டு ஐந்து ஆனது. மீண்டும் ஒரு நாள் ஞானந்தான் உருவான நாயகன் முருகப்பெருமான் ஆறுமுகங்களுடன் முத்தம்மை கனவில்

நேர்மைதான் சமுதாயத்தின் சிறப்பிற்கு அளவுகோல்.

தோன்றி, "பெண்ணே! உன் வயிற்றில் அறிவே வடிவாகக் கொண்டு இனிப் பிறக்கப் போகும் இளைய மகவாற்றான் மண்ணும் விண்ணும் துயர்நீங்கி, வேத நெறி விளங்கி வாய்மை வளர்ந்தோங்கும். அந்த ஆண் மகவால் ஆரும் பெற இய லாத வீட்டுப் பேற்றையும் எய்துவாய்" என்றுகூறி மறைந்தான்.

முத்தம்மை கனவு நீங்கிக் கண் விழித்து, மகிழ்வால் நெஞ்சம் நிறைந்து கந்தனையே சிந்தனை செய்து வந்தாள். முத்தம்மைக்குக் கருப்பம் வாய்த்தது. வளரும் கருவின் தன்மையைக் கண்டு முனிவர்களும் தேவர்களும் உலகம் உய்ய ஒரு நன் மகனைத் தருவாய் என வாழ்த்தி நின்றனர். நன்னிமித்தங்களுடன் காலம் கனிந்துவரக் கரு முதிர்ந்து பத்து மாதம் உதிர்ந்தது.

வேதநெறி விளங்க, தவநிலை தழைக்க, அருணைநகர் சிறந்தோங்க, உலகம் உய்ய, வள்ளியின் காதலன் புகழ் தழைக்க ஆனி மாதத்து உத்த ராயண புண்ணிய காலம் - பூரணையும் மூலமும் பொருந்திய புனித நாளில் - எல்லாக் கிரகங்களும் உயர்ந்து நிற்க ஞானசூரியன் உதித்தான். அவர் அவ தாரம் செய்த அந்த நாளில் மங்கல ஓசை முழங்கி நற்சகுனங்கள் தோன்றின. யாவரும் புதையல் கிடைத்தது போலக் குதூகலித்தனர். முருகன் புகழைச் சந்தத் தமிழிற் பாட உலகுக்கு அழகூட்டும் உத்தமன் தோன்றினான் எனத் தேவர்கள் மலர்தூவி மகிழ்ந்தனர். பெற்றெடுத்த முத்தம்மை பெரிதும் மகிழ்ந்து தன் தவத்தின் அடையாளத்தை வாசநீராட்டி அணிகலன்கள் அணிவித்து, அண்ணா மலையாரின் திருப்பெயரே மகவுக்கு விளங்கட்டும் என எண்ணிக் குழந்தைக்கு "அருணகிரி" எனப்புவியோர் அழைக்கட் டும் எனக்கூறி நின்றாள். அன்னையைவிட அதிக அன்பு பாராட்டும் அக்காள் "தம்பி" என வந்தவரைப் பாசத்தோடு பார்த்து மகிழ்ந்தாள். குறையாத தவப்பயனாற் பிறந்த இருவரையும் பார்த்துத் தாய் முத் தம்மை அடங்கா ஆனந்தம் கொண்டாள்.

நாளொரு மேனியும் எட்டிக் குறு நடை பயின்றது. இதனைக் கண்டு தாயும் தமக்கையும் முருகன் திருவருளை எண் ணிச் சந்தோஷத்தில் சங்கமித்தனர். அக்காவின் மடிமீதும், அம்மாவின் மார்பு மீதும் தோய்ந்து வளர்ந்து வரும் அருண கிரியாருக்கு வயது ஐந்தானது. தீந்தமி ழின் எல்லையைக் காண இருக்கும் அவரை நல்ல ஆசிரியர்கள் நிறைந்த பள்ளியில் சேர்த்தாள் தாய். ஞானத்தின் இருப்பிடமான முருகப்பெருமானே நம் கவிஞர் பெருமானுக்குக் குருநாதன் ஆதலில், ஆசிரியர்கள் கற்பிக்கும் பள்ளிப் பாடங்களைத் தள்ளி வைத்துத் தனது வயது கொண்ட சிறுவருடன் உறவாடி னால் தினையளவும் கற்கும் ஆர்வமின்றி வீதிகளும் சோலைகளுமாகச் சுற்றித் திரிந்து விளையாடி நின்றார். தாய் பல முறை வற்புறுத்தியும் படியாதவரையே படையாகக் கொண்டு திரிந்தார். அருண கிரியாரின் அடங்காமையைக் கண்ட ஆசிரியர் பலமுறை தண்டித்தும் கூட முயற்சி எதுவும் பலனளிக்கவில்லை. அருணகிரியாருக்காக ஆறுமுகப்பெருமான் ஆண்டி வேடம் பூண்டு அவர் முன் பல முறை வந்து பொற்காசுகளைத் தந்தருளி னான். ஆனாலும் கற்பதில் நாட்டமின்றி மனம் போன போக்கில் நடக்கலானார். அருணகிரிக்கு வயது பன்னிரண்டு ஆனது.

(தொடரும்..

உ

# சற்றே விலகும் பிள்ளாய்

## திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்

இறைவனுக்குத் தொண்டு செய்வதையே தமது வாழ்வின் கடமையாகக் கொண்டவர்கள் திருத்தொண்டர்கள். இவர்களுக்கும், இறைவனுக்கும் பேதமில்லை. சிவனடியார்களில் ஒருவர் திருநாளைப் போவார் என்ற அடியார். எல்லாம் வல்ல சிவபெருமான் இறைவியுடன் லிங்கஸ்வருபமாக எழுந்தருளிய திருக்கோயில்களில் சிறப்பு வாய்ந்தது. "திருப்புன்கூர்" எனும் தலம். மூவராலும் பாடல் பெற்ற தலம். சிவலோகநாதனை அனவரதமும் உள்ளம் எனும் கோயிலுள் ஆராதித்து வந்த பரம பக்தரான நந்தனாருக்குச் சிவபிரான் திவ்வியதரிசனம் அளித்த சரித்திரம் மெய்சிலிர்க்க வைக்கும். ஆதனூர் என்ற கிராமத்தில் தோன்றிய நந்தனார் ஓர் அந்தணரிடம் விவசாயத்தொழில் புரிந்துவந்தார். மிகவும் இறைபக்தி மிகுந்தவராக விளங்கினார். எப்போதும் சிவசிவ" என்று உச்சரிப்பார். தாம் செய்யும் தொழிலெல்லாம் சிவனுக்குச் செய்யும் தொண்டாகக் கருதினார். கோயில் வாத்தியங்களுக்கு வேண்டிய வாரும், தோலும், நரம்பும் தரும் பணியை மேற்கொண்டார். அவனருளாலே அவன்தாள் வணங்கி என்பதற்கேற்பச் சிவபெருமானின் அளவற்றகருணையால் குலமரபுகளிலோ, குலத்தொழிலிலோ அவர் மனம் ஈடுபடாமல் இறைவனின் சிந்தனையிலேயே நாட்டம் கொண்டது. அவரது பஞ்சேந்திரியங்களும் 'ஈசன் எந்தை இணையடி நீழலையே' நாடிப்போந்தன. ஆலயத்தின் வெளியே நின்று ஆடுவார், பாடுவார். சிவத்தலங்களுக்குப் போகவேண்டும் என்ற ஆசை பிறந்தது.

பக்கத்திலுள்ள திருப்புன்கூருக்குப் பேரார்வத்தோடு ஓடியும், நடந்தும் சென்றார். அவ்விறைவன்பால் ஆற்றொணாக் காதல் பிறந்தது. அது பக்தியாக வளர்ந்து "தேனார் பொழில் திருப்புன்கூர் உறை ஈசனைத் தரிசித்துக் கண்கள் பெற்ற பயனைப் பெறவேண்டுமென மனம் துடித்தது. ஆனால் ஏதோ வினைப்பயனால் தாழ்ந்த குலத்தில் பிறந்த அவரால் அக்கால விதியின்படி கோயிலுக்குள்ளே சென்று ஈசனைக் காணமுடியவில்லை, ராஜகோபுரத்துக்கு வெளியே நின்று தரிசிக்கவும், சிவலிங்கஸ்வருபனின் முன்பு அமர்ந்துள்ள நந்திப்பெருமானின் பிரம்மாண்டமானவடிவு, மூலஸ்தானத்திலுள்ள இறைவனின் திருவுருவை மறைத்தது. பெரும் ஏமாற்றத்தால் உடல்குறுகி, மனம் சோர்ந்து நின்றார். "ஆண்டவா! இதென்ன கொடுமை! உன்னைப்பார்க்க ஓடோடி வந்தேனே. வழியை மறைத்துக்கொண்டு, மலைபோல ஒருமாடு படுத்திருக்கிறதே" எனப்புலம்பினார்.

"சிவலோகநாதன் திருச் சந்நிதானம், மலையாகி நந்தி மறைத்திடுதே இங்கு" என்று உள்ளம் உருகினார். "பல காலஞ்செய்த பாழ்வினை குவிந்து மலையாகி நந்தி மறைத்திடுதே இங்கு" என்று கலங்கிக் கதறுகிறார். "தேரடியில் நின்று தரிசித்தாலும் போதும், கோவிலுள் வர மாட்டேன் ஐயனே" என்று கெஞ்சுகிறார். "ஓரடிவிலகினாற்போதும், இங்கே நின்று உற்றுப் பார்க்கச் சற்றே விலகாதோமாடு" என்று இறைஞ்சுகிறார். உடனே அடி

யார்க்கு எளியவனானஐயன் ஓர் அற்புதத் திருவிளையாடலை அரங்கேற்றினான்.

பிறப்பாலே தாழ்ந்தாலும், பக்தியாலும், ஞானத்தாலும் உயர்ந்திருந்த நந்தனாரின் மாண்பை உலகோர் அறியும் வண்ணம் ஒரு திவ்வியலீலையைப் புரிகிறார் ஈசன். தன் பரமபக்தரான நந்திகேஸ்வரரை விளித்து சந்நிதானம் மறைக்காவண்ணம் நகர்ந்து வழிவிடச் சொல்கிறார்.

"சற்றே விலகும் பிள்ளாய்! சந்நிதானம் மறைக்குதாம்"
"நற்றவம் புரிய நம்மிடம் திருநாளைப் போவார் வந்திருக்கின்றார்"
என்று உத்தரவு இடுகிறார்.

"பூதலத்தில் இவனைப் போலப், புண்ணிய புருஷரில்லை" எனப் போற்றுகிறார். "பக்தியில் கரைகண்டவன் சித்தங் குறையில், நமது செல்வம் முற்றும் குறையும். தயவுசெய்து சற்றே விலகி இரும் பிள்ளாய்" என்று நந்திதேவரிடம் ஈசன் அன்போடு வேண்டுகிறார். "கோதிலாக் குணமுடையோன் கோபங்கொண்டால் தாழ மாட்டாய்" ஆதலால் என் சந்நிதானம் மறைக்காமல் சற்று நகர்ந்து அமர்வாய்" என்று கருணாமூர்த்தி உத்தரவு இடுகிறார். பவித்திரமான பக்தியின் சக்தி அது இறைவன் ஆணைக்கு உட்பட்ட பிரம்மாண்டமான நந்திதேவன் சர,சர வென்று வலப்பக்கம் நகர்ந்து அமர்ந்தார். ஜோதீஸ்வருபனான சிவலோகநாதனின் திவ்யருபத்தைத் தேரடியில் நின்ற வண்ணம் பக்திப் பரவசத்துடன் தரிசித்தார். ஆனந்தங் கொண்டார். ஆடினார், பாடினார். இறைவனைத் தரிசிக்கும் பேறு பெற்று விட்டேனென்று பெருமிதம் அடைந்தார். எனக்கு இரங்கி அருள்செய்த பெருமானுக்கு நான் ஒருதொண்டு செய்ய வேண்டும் என்று இறைவன் திருப்பணிக்குத் தங்குதடையின்றித் தண்ணீர் கிடைக்கவேண்டுமென்று ஒரு குளம் வெட்டினார். பின் ஆனந்தமாக விடை பெற்றுத் தமதூர் சென்றார்.

பின்பு அவருக்குத் தில்லைச் சிதம்பரத்திற்குப் போகவேண்டுமென்ற ஆசை வந்தது. "தில்லை அம்பலத் தலமொன்றிருக்குதாம், அதைக்கண்டபோர்க்குச் சனனமரண பிணியைக் கருக்குதாம்" என்ற செய்தியை அறிந்தார். அம்பலத்தில் ஆடும் நடராஜப் பெருமானைக் காணவேண்டும். சிதம்பரம் போகவேண்டும் என்ற துடிப்பு நந்தனாருக்கு ஏற்பட்டது. அங்கு தூய்மையே உருவாதில்லை மூவாயிரவர் பூஜை செய்கிறார்களாமே. நான் எப்படி அங்கு போவேன் என்று மனமுடைந்தார். ஆயினும் நாளுக்குநாள் சிதம்பரம் போகவேண்டும் என்ற ஆவல் கூடியதே தவிரக்குறையவில்லை. "நாளை நான் கட்டாயம் போவேன்" என்று உறுதி கொள்வார். நாளைக்குப் போவேன் நாளைக்குப் போவேன் என்று சொல்லிவந்த படியால் "நாளைப்போவார்" என்று எல்லாரும் அழைத்தனர். அவர் தொழில் செய்யும் அந்தணரிடம் கெஞ்சிக் கூத்தாடி உத்தரவு பெற்றுத் தில்லை வந்துசேர்ந்தார். அவர் கனவு நனவானது. எங்கு பார்த்தாலும் வேதஒலியும், ஓமகுண்டங்களும், அரகர ஒலியும் நிறைந்திருப்பதைக் கண்டு வெருண்டார். மிகவும் தூய்மையான இடத்தில் நான் எப்படிப் போவேன் என்று வருந்தி, தில்லையைவலம் வந்து, இரவும், பகலும் உள்ளம் நொந்து, உடல் சோர்ந்து சற்றே உறங்கினார். இறைவனே கனவில்

வந்து அவரைத் தேற்றினார். தில்லை மூவாயிரவரைத் தீ வளர்க்கப் பணித்துள்ளேன். அதில் மூழ்கி எழுந்தாற் புதிய வடிவம் பெறுவாய். அத்துடன் நம்மை வந்தடைவாய் என்று அன்புடன் கூறியருளினார்.

தில்லை மூவாயிரவர்க்கும் கனவில், "நமது பக்தன் ஒருவன் ஊருக்கு வெளியே படுத்திருக்கிறான். நந்தன் என்று பெயர் நம்மைக்காண வந்துள்ளான். அவன் மூழ்கத் தீ வளர்ப்பீர். அவனை நம்மிடம் அழைத்து வருவீர்" என நடராஜப் பெருமான் கட்டளை பிறப்பித்தார். திடுக்குற்று விழித்த தில்லைவாழ் அந்தணர்கள், அவரைத்தேடிக் கண்டுபிடித்து அவர் காலடியில் வீழ்ந்துவணங்கி, இறைவன் ஆணையைக்கூறினர். தெற்குக் கோபுரவாயிலில் வளர்த்த தீயினில் நந்தனார் மூழ்கினார்.

முப்புரிதரித்த முனிவர் உருவில் சடைமுடியுடன் தீக்கொழுந்து போல் வெளியே வந்தார். அடியார்கள் கைகூப்பித்தொழுதனர். ஆண்டவனைக் காணும் ஆர்வம் நிறைந்தவராய் தெற்குக் கோபுர வாயில் வழியே தில்லை நடராஜர் ஆடும் அம்பலத்து எல்லையை அடைந்தார். "உள்ளே புகுந்தார். நடமாடும் எல்லையிலே தலைப்பட்டார். யாவரும் கண்டிலர்" என்று சேக்கிழார் பெருமான் பாடினார். தில்லை மூவாயிரவர் அதிசயித்தனர். அடியார்கள் துதி செய்தனர். சுந்தரர் "செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்" என்று பெருமையாகக் கூறுகிறார். நந்தனாருடைய பக்தியும் "மார்கழி மாதத் திருவாதிரைநாள் வரப்போகுது மையே, மனதைப்புண்ணாக்காமல் சிதம்பரம் போக உத்தரம் தாருமையே" என்று அந்தணரிடத்தே வைராக்கியத்தோடு போராடி, தில்லைச் சிதம்பரநாதனை சிற்சபேசனை அம்பலக்கூத்தனை, ஐந்தெழுத்துச் சொரூபியாக விளங்கும் நடராஜ மூர்த்தியை, கனகசபாபதியைக் கண்ணாரக் கண்டுகளிக்க வேண்டுமென்ற பேரார்வமும் தீராதகாதலும் அவரைத் தில்லைநடராஜனைக்கண்டு, அவரோடு இரண்டறக் கலக்கச் செய்தது. நாமும் அந்தப்பரம பக்தராகிய நந்தனார் வழியில் அனைவரதும் கருணாமூர்த்தியாகிய சிதம்பர நாதனை இதயக்கோயிலில் ஆராதித்து அவனருள் பெறுவோமாக.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

## தவத்திரு வே. முருகேசு சுவாமிகள் அவர்களின் பத்தாம் ஆண்டு குருபூசைத் தினம்

மேற்படி சுவாமி அவர்களின் குருபூசை 26.03.2007 திங்கட் கிழமை பக்தி பூர்வமாகவும் அமையான வழிபாட்டுடனும் ஆரம்பமாகியது.

ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெற்ற விஷேட அபிஷேக பூசைவழிபாட்டுடன் ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் முருகேசு சுவாமிகளின் அடியார்களால் உருவாக்கப்பட்ட மண்டபத்தில் அறுபத்து மூவர் குருபூசையுடன் நிறைவு பெற்றது.

**தீ தேடும் ஆத்மா உண்மையில் தீயே.**

உ

# திருவாசகத் தேன்துளி மலவிருளகற்றுந் திருவெம்பாவை

துணைவியூர் தி. கேசவன் அவர்கள்

## அன்னவரே எங்கணவர்

கனிவுமிக்க அதிகாலைப்பொழுது தான் அது. உலகத்து உயிரினங்கள் தம் துயில்கலைத்து சுறுசுறுப்பாய் இயங்கத் தொடங்குகின்றநேரம். கதிரவன் கீழ் வானில் உதயமாக ஆயத்தமாகின்றான். காலைப்பொழுதில் தங்கடன்கருதி உற்சாகமாய்த் தொழிற்படத்தொடங்கும் உயிரினங்களுள் தூக்கமயக்கந்தரும் இன்பங்கருதி தங்கடன்மறந்து, மறுத் திருப்பவையும் உண்டன்றோ! இப்பேதைப் பெண்ணானவளும் தூக்கக்கிறக்கத்தில் பொன்னான நேரத்தை மண்ணாக்குகின்றாளே, எனக்கருதிய கூட்டத்தார் அவளைத் துயிலெழுப்பும் முயற்சியில் சளைக்காது ஈடுபடுகின்றனர்.

விடிகாலைப் பொழுதிற்குக் கட்டியங் கூறுவதாய், "கோழிகள் கூவுகின்றன. மற்றைய பறவைகளும் எங்கும் ஒலி எழுப்புகின்றனவே, ஆலயத்தில் வாத்தியங்கள் ஏழிசையிசைக்கின்றன, வெண் சங்குகளும் முழங்குகின்றனவே," நீ இவற்றை கேட்கவில்லையா? காலைப் புலர்வை உணரவில்லையா?

"கோழி சிலம்பச் சிலம்பும் குருகு எங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும்"

கோழி கூவியதையும் குருகுகள் சிலம்பியதையும் விடு, வாத்தியங்கள் இசைத்ததையும் சங்குகள் முழங்கியதையுங்கூட விட்டுவிடு, நாங்கள், "ஒப்பற்ற ஒளிப்பிழம்பானவனும் ஒப்பற்ற கருணையுடையவனுமாகிய சிவபெருமானது நிகரற்ற உயர்ந்த புகழைப் பாடினோமே!"

"கேழ் இல் பரஞ்சோதி கேழ் இல் பரங்கருணை
கேழ் இல் விழுப்பொருட்கள் பாடினோம்"

அதையுங்கூட நீ **"கேட்டிலையோ! வாழி"** வாழ்வாயாக. (இங்கு பழித்துரைத்தல் கருதி, இகழ்ச்சிக் குறிப்பாய் "வாழி" என்றனர்.)

கோழிகளினதும் பறவைகளினதும் ஒலிகள் கேட்டும், வாத்தியங்களினதும் சங்குகளினதும் ஓசைகள் கேட்டும், நீ தூக்கங்கலையவில்லை, நாம் இத்துணை நேரம் இறைபுகழைப் பாடியும், நின்னைத் துயிலெழுப்ப பலவாறு முயன்றும், நீ அவற்றைச் செவிமடுக்காது இருக்கின்றாயே! தூங்குகின்றாயே! அப்படி **"ஈது என்ன உறக்கமோ? வாய் திறவாய்!"** வாய் திறந்து கூறுவாயாக, என இளந்தோழியை நோக்கிக் கேட்ட கூட்டத்தார், **"ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ?"** "ஆழியிற் துயில் கொள்பவனாகிய திருமால் இறைவனிடத்தில் அன்பு கொண்டமையும் இவ்வாறானதோ?" என்றனர். தொடர்ந்து "பேரழிவுக் காலத்தின் இறுதியில் தலைவனாய் நின்ற ஒருவனை, உமைபாகனைப் பாடுவாயாக"

"ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடு" (ஏல் ஓர் எம்பாவாய்) எனத் தோழியை வேண்டினர்.

ஒருவன் உனக்குச் செய்த உபகாரத்தை ஒருபோதும் மறவாதே.

இப்பாடலில் 'ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ?' என நகைச்சுவையாய், கன்னிப்பெண்கள் வாயினூடே வினவுகிறார் மணிவாசகர். திருமால் (உன்னைப்போல்) எந்நேரமும் பாற்கடலில் துயில் கொள்பவனாயிற்றே! அதனால் அவன் சிவன் மீது கொண்ட அன்பும் இத்தகையது தானோ? எனவேதான் திருமாலால் 'சிவனைக் காணமுடியாமற் போயிற்றோ? எனக் கேட்கிறார் கவிஞர். கேட்பதல்ல! உறக்க மயக்கத்தில் இருந்தால் 'இறைதரிசனம்' கிட்டாது என்பதை எமக்கு அறிவுறுத்துகின்றார். கருணையாளனாகிய (கேழ் இல் பரங்கருணை) இறைவன் எம்மீது கருணை பொழியத் தயாராயிருக்கிறான். 'ஒளிப்பிழம்பாகிய' (கேழ் இல் பரஞ்சோதி) அவன் எம் வாழ்வை ஒளிமயமாக்க வல்லவனாயுமிருக்கிறான், நாம் துயில்கலைத்து விழிப்புற்றால், என்பதையும் குறிப்பால் உணர்த்துகிறார் போலும்.

சிவபெருமானை இப்பாடல் "ஊழிமுதல்வனாய் நின்ற ஒருவன்" என்றும் "ஏழைபங்காளன்" என்றும் சித்திரிக்கின்றது. பிரபஞ்சம் பேரழிவுற்றபோது அழியாதவொருவனாய், தலைவனாய் நின்று உலகைச் சிருஷ்டித்தவன் அவனே! என்பதை நினைவுபடுத்துகிறார். அதுமட்டுமன்றி இறைவனை 'சிவசக்தி' வடிவமாய்ப்பேசி சக்திமூலமாய் அவனை நினைவுபடுத்தி 'ஊழிமுதல்வனாய்' நின்ற மர்மத்தை உணர்த்துகிறார்.

அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகர்கையில் தோழிப்பெண் எம்மாத்திரம்? தூக்கக்கிறக்கத்திலிருந்து மெல்ல விடுபட்டவளாய் இளந்தோழியானவள் எழுந்து வருகிறாள். மாயமயக்கமாம் சாம்பலால் மூடுண்டு கிடந்த தணலாகிய இறைநாட்டம் உள்ள ஆன்மா சாம்பற்போர்வை நீக்கி பிரகாசிப்பதைப்போல துயிலெழுந்து வந்து தன் தோழியர் கூட்டத்தோடு இணைகின்றாள். "விண்ணுளார் தொழுது ஏத்தும் விளக்கினை; மண்ணுளார் வினைதீர்க்கும் மருந்தினை" தானும் நாடிச்செல்ல விளைகிறாள். தோழியருடன்கூடி, இறைநாமம் பாடி மெய்ப்பொருளைத் தேடியனுபவிக்க முனைகிறாள். மெய்யின்பத்தைநாடித் தோழியர் கூட்டம் நகர்கின்றது. இறைநாமமும் அவன் தீராப்புகழும் அவர்தம் வாய்களினூடே அதிகாலையமைதிகலைத்துக் கலக்கிறது.

இறை சிந்தனையுடனேயே தாங்கள் தொடர்ந்து இருக்கவேண்டும், வாழவேண்டும் எனக் கூட்டத்தார் விரும்புகின்றனர். இறையடியார்களையும் இறைவனாகப் பாவித்துப் பணியத் தலைப்படுகின்றனர். இறையடியார்களே தங்களுக்குக் கணவராக வாய்க்கவேண்டும் என விரும்புகின்றனர். அவர்கள் தம் விருப்பத்தை இறைவனிடம் முன்வைக்க விரும்பி அவனை விளிக்கின்றனர்.

"முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியளே!"

"முற்பட்டவனாகிய பழமையான பொருட்களுக்கெல்லாம் முற்பட்டதான பழமையான பொருளே; பிற்பட்டவனாகிய புதிய பொருட்களுக்கும் எல்லாம் மறுபடியும் புதிய இயல்போடிருப்பவனே;" இறைவனை விளித்த கூட்டத்தார் நாங்கள் **"உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்"** "உன்னைத் தலைவனாகப் பெற்ற உன் சிறப்புமிக்க அடிமைகள்" அதனால் நாம் "உனது அடியவர்களின் திருவடிகளை

வணங்குவோம். அங்கே அவர்களுக்கே உரிமையுடையவர்களாவோம்" அதற்கு நாம் தயாராயுள்ளோம். **"உன்னடியார் தாள் பணிவோம்; ஆங்கவர்க்கே பாங்கா வோம்"** என தம் உறுதியை வெளிப் படுத்துகின்றனர். மேலும் "அத்தகையவரே எங்கள் கணவராகவேண்டும்" அவ்வாறா யின் அவர் விருபபும் எம்விருப்பும் ஒன்றா குமாதலால் "அவர் விரும்பிக் கட்டளை இட்ட வண்ணமே அவருகந்த தொண்ட ராய்ப் பணிசெய்வோம்" எனத் தம் விருப்பை வெளியிடுகின்றனர்.

"அன்னவரே எங்கணவர் ஆவார்: அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்" என்றனர்.

"எங்கோன், எமக்கு **இன்ன வகையே நல்குதியேல்"** எங்கள் பெரு மானே, எங்களுக்கு இவ்வாறே கிடைக்கும் வண்ணம் நீ அருள்புரிவாய் என்று சொன் னால்" நாம் **"என்ன குறையும் இலோம்"** (ஏல் ஓர் எம்பாவாய்) எந்தக் குறையும் அற்றவராவோம் என்றனர். இத்தகைய வாழ்வே தமக்கு நிம்மதியைத் தரும், பெரும்பேற்றைத் தரும் என்பதால் இத னையே எமக்குத் தருவாயாக என இறை வனை வேண்டுகின்றனர்.

செல்வந்தனாக, நற்தொழில் வல்லவனாகக் கணவன் வாய்க்கவேண்டு மென விரும்பாமல் இப்பேதைப் பெண்கள் 'இறையடியாரை'த் தங்கணவராகக் காண விரும்புகின்றனரே! என்னே மடமை! என நாம் நினைக்கலாம். மாப்பிள்ளை தேடும் படலத்தின் 'தகுதி'ப்பட்டியலில் 'இறையன் பராயிருத்தல்' என்பதை நாம் யாரும் இன்று சேர்ப்பதில்லைத்தான். ஆனால் அக்கன்னியர் எம்மைப்போலன்றி உல கியல் வாழ்வையும் பேரின்பப் பெருவாழ் விற்கான பாதையாகவே அமைக்க விளை கின்றனர். தம் வாழ்வின் மகிழ்வை, திருப் தியை உலகியற் சுகபோகத்தில் காணா மல் 'இறை நாட்டத்திற்' காணவிளைகின் றனர். எப்போதும் இறைநினைப்பிலிருக் கவும், இறைபணியிலிருக்கவும் இறையடி யார் தங்கணவராவதே பொருத்தமானது என நினைக்கின்றனர். அவர்தம் எண்ணம் சரியானதே. இத்தகைய 'மன மொருமித்த' வாழ்க்கை இவர்களுக்கு நிம்மதியை மட்டுமல்ல நித்தியப் பேரின்பத்தையும் வழங்கவல்லதாயிருக்கும் அட! இவர்கள் புத்திசாலிப்பெண்கள் தாம்! நிற்க, இங்கு கன்னிப் பெண்ணாக மனித 'ஆன்மா'வை நோக்கலாம். முத்தி பெறவிளையும் 'ஆன் மாவிற்கு' தன்முயற்சியில் துணைவரக் கூடிய உடலை (கணவன்) அடைவது அவசியமாகிறது. இறைவயப்படக்கூடிய உலகியல் இன்பங்களைக் கடந்து ஆன் மீக நாட்டங் கொள்ளக்கூடிய உடல் வாய்க்கின்றபோது 'ஆன்மா'வின் முத்திப் பயணம் வீறுநடை போடுமல்லவா? இப்பாட லில் மணிவாசகர் இதையுந்தான் உரு வகிக்கிறார். "தலையே நீ வணங்காய்........" என அப்பர் சுவாமிகள் திருவங்கமாலை யைப் பாடியதும் இதனாற் தான் போலும்.

இப்பாடல் காலங்கடந்தவனாய் இருக்கும் இறைவனது இயல்பைப் பேசு கின்றது. பழைமையானவற்றுக்கெல்லாம் பழமையானவனாயும் புதுமையானவற்றுக் கெல்லாம் புதுமையானவனாயும் திகழும் அவன் திறத்தை உரைக்கின்றது. இறை வன் பழையவனா? புதியவனா? அவன் எக்காலத்திற்குரியவன்? என்ற வினாக்கள் எம்மனதில் தோன்றுமாயின் அதற்கான விடையை இப்பாடல் சொல்கின்றது.

பிறஉயிர்களைத் துன்புறுத்துவது தன் உயிருக்கே உலையாய் முடியும்.

'இறைவன்' கடந்தகால நிகழ்கால எதிர் கால நாயகனாய், எக்காலத்திற்கும் உரியவனாய் விளங்குபவன். அவன் பழையவனுமல்ல; புதியவனுமல்ல. ஆனால் மிகப்பழையவனுமவனே! மிகப் புதியவனுமவனே! இதனையே "முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளே பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே" என்றவடி இயம்பி நிற்கின்றது. 'ஆதியும் அந்தமுமில்லாதவன்' 'ஆதியாயும் அந்தமாயும்' நிற்குந்திறன்கண்டு மகிழ்கிறோம். 'காலங்கடந்தவனை' அனுபவிக்க நாம் காலங்கடத்துவானேன்.

(தொடரும்...

# திருநீறு

ஏழை நெசவாளி ஒருவன், ஊருக்கு வந்த சாமியாரிடம், சுலபமான உபதேசம் செய்யுங்கள் என்று கேட்டான். சாமியார் புன்னகை புரிந்தார். "அப்பா! திருநீறு பூசிய முகத்தைப் பார்த்த பிறகு தான் ஆகாரம் சாப்பிடுவது என்ற ஒரு கொள்கையை வைத்துக் கொள்" என்று அருளினார்.

"அப்படியே என்றான் ஏழை" அவனுடைய பக்கத்துவீடு ஒரு குயவனாருடையது. அந்தக்குயவனார். பரமசிவபக்தர். நெற்றியில் எப்போதும் வெண்ணீறு தரித்துக் கொண்டிருப்பார். அடிக்கடி அவனுடைய வீட்டுப் பக்கம் வருவார். திருநீறு பூசிய அவருடைய முகத்தைப் பார்த்த பின்னரே, கூழானாலும் குடிப்பதை வழக்கமாக்கிக் கொண்டான் ஏழை. ஒருநாள், குயவனார் அவன் வீட்டுப் பக்கம் வரவில்லை. கடும் பசியால் துடித்தான் ஏழை. "போய் அவர் வீட்டில்தான் பார்த்து விட்டு வாருங்களேன்" என்றாள். "சரி" என்று அடுத்த வீட்டிற்கு ஓடினான். அந்த வேளை குயவனார் களிமண் எடுக்கும் பொருட்டு ஏரிக்குச் சென்றிருந்தார். ஒரே ஓட்டமாக ஏரிக்கரைக்கே ஓடினான்.

அங்கே ஒருபெரிய பள்ளம் அதில் குயவனார் மண் வெட்டி எடுக்கும் போது இரண்டு தங்கக்குடங்கள் இருந்தன. யாராவது பார்த்து விட்டால் துன்பமாயிற்றே என்று, மேலே நிமிர்ந்து பார்த்தார். அந்த நேரத்தில் ஏழை, "பார்த்து விட்டேன்!" என்று கூறிவிட்டுப் பிடித்தான் ஓட்டம். அவன் பார்த்தது, அவரது வீபூதி அணிந்த முகத்தைத்தான். குயவனார் பதைத்துப்போனார். 'இவன் யாரிடமாவது சொல்லிவிட்டால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போகுமே' என்று அஞ்சினார்.

பதட்டத்தோடு அவனை அழைத்த குயவர், "நீயும் ஏழை, நானும் ஏழை ஆளுக்கு ஒருகுடம் எடுத்துக் கொள்வோம். இதை வெளிப்படுத்த வேண்டாம். இந்தா, ஒரு குடம், நீ கொண்டுபோ" என்று கொடுத்து விட்டார். "திருநீறு பூசிய முகத்தைப் பார்த்த ஒரு நன்மையின் காரணமாகவே இந்த நலம் எய்தியதே. நாமே திருநீறு பூசி வழிபாடு செய்தால் இகபர நலன்கள் எய்துமே" என நினைத்த நெசவாளி, அன்றுமுதல், முறையே ஆசார அநுஷ்டானங்களை மேற்கொண்டு, திருநீறு பூசித் தெய்வமணம் கமழச் சிறந்து விளங்கினான்.

அறியாமல் இறை சிந்தனை கொண்டாலும்
அளப்பரிய நலன் உண்டு - வாரியார்.

*தர்மிளா படிகலிங்கம்*

அன்பு என்பது தேன்போன்றது . அதைநுகரவரும் ஈ அதிலேயே ஒட்டிக்கொள்ளும்.

உ

# ஆறுவது சினம்

## திரு நா. நல்லதம்பி அவர்கள்

"ஆறுவது சினம்" என்று சொன்னவர் ஔவையார் என்ற பெண்பாற் புலவர் ஆவர். ஆறுவது சினம் என்றால், கோபம் அடக்கிக் கொள்ளப்பட வேண்டியது என்று பொருள் கொள்ளலாம்.

இந்த ஔவையார், சிறுவர்களுக்கு முன்பள்ளியிலிருந்தும் ஆரம்பப் பள்ளியிலிருந்தும் "ஔவைப்பாட்டி" என்ற பெயரில் அறிமுகமாகிறார்.

இந்த ஔவையார், நீதிநெறிகளைச் சிறுபராயத்திலிருந்தே பிள்ளைகளுக்குப் புகட்ட வேண்டுமென்பதில் கவனஞ்செலுத்தியிருக்கிறார். அந்த வகையில் அவரது 'ஆத்திசூடி'யில் அறஞ்செய விரும்பு, ஆறுவதுசினம்... என்று அரசன் ஆணையிடுவது போல மிகவும் கண்டிப்பாகவும் கூறியிருப்பதையுங் காண்கிறோம்.

அறநெறிகள் என்பவை காலத்துக்குக்காலம் மாறக்கூடியவையல்ல. அதனால், சிறுவர்கள் இவற்றை இளம் பராயத்திலிருந்தே அறிந்துகொள்ளவேண்டும். பெருக்கல் வாய்பாடுகளை மனனஞ் செய்வது போல நீதிநெறி வாக்கியங்களை மனதிற் பதித்து வைக்கப்பழகினால், அது அவர்கள் வாழ்வில் நல்ல பலனைக் கொடுக்கும். அவர்களுக்கு நல்ல விளக்கத்தையும் கொடுக்கும் என்பது தாயுள்ளம் கொண்ட ஔவையாரின் கருத்தாகும்.

பாப்பாப் பாட்டிலே பாரதியாரும், "ஓடிவிளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா; கூடிவிளையாடு பாப்பா, ஒரு குழந்தையை வையாதே பாப்பா" என்று, சிறுவர் தம்முள் கூடி விளையாடும் போதே ஒருவரோடு ஒருவர் கோபப்படக் கூடாது என்று கூறுகின்றார். (வைதல் - கோபித்தல், வையாதே - கோபிக்காதே)

ஆக, "நன்றுந் தீதும் பிறர்தர வாரா," என்பதுபோல நன்மையான நல்ல பழக்கங்களும் தீயவிளைவுகளைத் தரக்கூடிய தீயகுணங்களும் எமது மனத்திலிருந்துதான் வெளிவருகின்றன என்பது உண்மையானது. அதனால், தீமை தரக்கூடிய குணங்களில் மிகவும் பொல்லாததான கோபத்தை உண்டாக விடாமல் நடந்துகொள்ள வேண்டும் என்பதே பெரியோர் சொல்லும் நீதிநெறியாகும்.

சினம் அல்லது கோபம் பற்றித் திருவள்ளுவர் கூறும்போது,

"தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்" - என்கிறார்.

அதாவது, தன்னை ஒருவன் துன்பம் வரவிடாமல் காப்பாற்றவேண்டுமானால் தனது மனதிலிருந்து கோபம் வெளிப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் அந்தச்சினம் அவனுக்கே தீமையாய் முடியும் என்பது அவர் கருத்தாகும்.

அதுவுமின்றி, ஒருவனது கோபம் அவனை மாத்திரமன்றி, அவனது இனத்தையே அழிக்கவல்லது. தம்மின் மெலிந்தவரிடத்தாயினும் வலியவரிடத்திலாயினும் சினங்கொண்டால் காலப்போக்கில் சினங் கொள்பவருக்கே தீமைகள் வருவதைக் காண்கிறோம். ஆதலினால் எவரிடத்திலும்

**மனச்சாட்சியைத் துறந்தவனிடம், மதிக்கத் தக்கது வேறெதுவும் கிடையாது.**

எமது சினத்தைக் காட்டாமல் இருப்பதே சிறந்தது என்கிறார் தெய்வப்புலவர்.

சினங்கொள்பவர், கடுஞ்சொல் பேசுவார்; கொடுஞ்செயல் புரிவார், அவ்வாறான சினம் அடங்கும்போது, கடுஞ்சொலாலும் கொடுஞ்செயலாலும் உண்டான விளைவுகள் மாறாமல் இருக்கும். அதனாலே சினப்பவர் தமது வாழ்வில் பகையைத் தேடிக்கொண்டவராவார். அத்துடன் இன்பமான வாழ்வையும் இழந்தவராவார்.

"காவாது ஒருவன் தன் வாய்திறந்து சொல்லும்சொல்
ஓவாதே தன்னைச் சுடுதலால் - ஓவாதே
ஆய்ந்தமைந்த கேள்வி அறிவுடையார் எஞ்ஞான்றும்
காய்ந் தமைந்த சொல்லார் கறுத்து

என்ற நாலடியார் கூற்றையும் அறிந்து கொள்வோமாக.

இதனை வள்ளுவர் பெருமான்,

யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. என்றும்
தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு. என்றும்

கூறியிருப்பதும் நோக்கத்தக்கது.

இங்கே, தீயினாற் சுட்டது புண் என்றும் நாவினாற் சுட்டது வடு என்றும் வள்ளுவர் கூறியதிலுள்ள நயம் மிகவும் சிறப்பானது. தீயினால் உண்டான புண் மருந்தினால் ஆற்றிக் கொள்ளக்கூடியது; ஆறிவிடும். ஆனால், நாவினால் ஏசுகின்றபொழுது அது "வடு" ஆக, ஆறாத அடையாளமாக பிறர்மனத்தைப் புண்படுத்தி விடும்; அந்தவடு எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கும்!

"வில்லம்பு பட்டதுன்பம் வேதனை தராது
சொல்லம்பு பட்ட துன்பம் மாறாது, என்றும் மாறாது"

என்றும் ஒரு பாடல் உண்டு.

இங்கே, தசரதன் பட்ட துன்பத்தை நோக்கலாம்.

அரசர்கள் வழக்கமாக மிருக வேட்டைக்குச் செல்லுவதுண்டு. அவ்வாறு வேட்டைமேற்கொண்ட தசரதமன்னன், ஒரு மரநிழலில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த போது, தூரத்திலுள்ள ஒரு நீர்நிலையில் இருந்து ஒருசத்தம் கேட்டது. அந்த ஒலி யானை நீர் குடிப்பதனால் உண்டான ஒலி என்று அனுமானித்த அரசன், அத்திசை நோக்கி அம்பை எய்கின்றான். அந்த இலக்குத் தவறவில்லை. ஆனால் அம்பு பட்டதனால் உண்டான ஒலி, மனிதக் குரலாக இருந்துள்ளது. தசரதன் பதை பதைப்புடன் அவ்விடத்தைச் சென்றடைகிறான்.

அங்கே, கண்பார்வையிழந்த ஒரு முனிவரான தனது தந்தைக்கு நீர் மொண்டு செல்லவந்த சிறுவன், தசரத மன்னனின் அம்புக்கு இலக்காகி உயிராபத்தில் இருக்கிறான்.

தசரதனின் காலடி ஓசை கேட்ட சிறுவன் தனது தந்தையின் இருப்பிடத்தையும் அவருக்கு நீர் கொண்டு செல்ல

உன் நாவைக் காப்பாற்று உன் நண்பனைக் காப்பாற்றுவாய்.

வந்த கதையையுங் கூறிய அளவில் இறந்து விடுகிறான்.

சிறுவனை ஒரு தோளிலும் நீர்க் குடத்தை மறுதோளிலுங்கொண்டு தசரதன் முனிவருடைய ஆச்சிரமத்தை அடைகிறார். தனது மைந்தனே வருகிறான் என்று எண்ணிய முனிவர், அப்பா, மகனே, இவ்வளவு தாமதம் ஏன்? ஓடி வா என்கிறார்.

என்ன சொல்லுவது? எப்படிச் சொல்லுவது என்று எத்தனையோ போர்க் களங்கண்ட மன்னன் மனங்கலங்கி நின்று, முனிவர் பெருமானே, யான் அயோத்தி மன்னன், தசரதன், தங்களுக்கு நீர் கொண்டு வந்திருக்கிறேன். தாகந் தணியுங்கள் என்கிறான்.

ஆ! அப்படியா, எனது மகன் எங்கே? முக்காலமும் உணர்ந்த முனிவருக்கு கோபம் தலைக்கு ஏறிவிட்டது.

தசரதன், நடந்த கதை கூறிப் பணிகின்றான்.

"கண்ணிழந்த எனக்குக் கண் போல இருந்த எனது மகனை இழந்த புத்திரசோகத்தால் எனது உயிர் பிரியப் போகிறது. இதுபோல நீரும் ஒரு காலத்தில் புத்திரசோகத்தால் இறப்பீராக" என்று முனிவரின் சொல்லம்பு தசரதனது இதயத்தில் தைத்தது.

இந்த "வடு" மாறாமலே இருந்து இராமன் வனவாசஞ் செய்யப் போய்விட்டான் என்ற செய்தி கேட்டபொழுதே, மகன் இறந்தது போன்ற சோகத்தால் தசரத மன்னனுடைய ஆவி பிரிகின்றது. இது இராம காவிய வரலாறு.

சினங்கொண்டதும் கடுஞ்சொல் வருவதை முனிவராலும் தடுக்க இயலவில்லை.

சினங்கொள்ளுவது என்பது தவஞ் செய்பவர்களுக்குக் கூடாது. அவருடைய சினம் அவருடைய தவத்தைக் கெடுத்தது; சினத்தினால் எழுந்த கடுஞ்சொல் தசரத மன்னனுக்கு இட்ட சாபமாகப்போய் விட்டது.

இதுபோலவே, பாரதக் கதையிலே, பாஞ்சாலி தன்னை ஏளனஞ் செய்தாளென்று கோபமடைந்த துரியோதனன், அவளைப் பழிவாங்கும் எண்ணத்தினால் மானபங்க நாடகத்தை நடாத்தி பாண்டவரோடு பகைத்து தன்னையும் தன் இனத்தையும் அழிக்கின்றான்.

இவ்வாறு இலக்கியங்களில் நாம் காண்கின்றவையெல்லாம் நமது நாளாந்த வாழ்க்கையில் நடப்பவை தாம். ஆகையால்,

"உள்ளங் கவர்ந்து எழுந்து ஓங்கு சினங் காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க - வெள்ளம்
தடுத்தல் அரிதோ, தடங்கரை தான் பெயர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு"

என 'நன்னெறி'யிலே சிவப்பிரகாசர் சொன்ன வழியைப் பின்பற்றுவோம்.

குணநலம் படைத்த பெரியோர்கள், ஒரு கணப்பொழுது கூடக் கோபங் கொள்ளமாட்டார்கள்.

குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேனும் காத்தல் அரிது.

என்பது தெய்வப்புலவர் வாக்கு ஆகும்.

*தன்னைச் சரிப்படுத்திக்கொள்பவனே, உலகைச் சரிப்படுத்த தகுதியானவன்.*

# தேவார முதலிகளும் மணிவாசகரும்

திரு ஆ. மகேசு அவர்கள்

**தே**வாரம் பாடிய திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய மூவரும் தேவாரமுதலிகள் எனப்படுவர். இவர்கள் அருளிச் செய்த தேவாரப்பதிகங்களுக்கும் மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்திற்கும் வேறுபாடுகள் நிரம்ப உண்டு. இவர்கள் அனைவருமே மெய்யடியார்கள். இறையனுபவத்தில் தோய்ந்தவர்கள் என்பதில் எவ்வித ஐயப்பாட்டிற்கும் இடமில்லை. இவர்களுக்குள் தாரதம்மியம் கற்பிப்பது மாபெரும் தவறாகும். எனவே இந்த அடிப்படையில் இல்லாது, அவர்கள் யாத்த பதிகங்களை எடுத்து உற்றுநோக்கினால் சில உண்மைகள் தெரியவரும். மூவர் முதலிகள் அருளிச்செய்த தேவாரங்கள், இறைவனைப் புகழ்வதற்கு அக்காலத்தில் பரவியிருந்த அவன் அருட்செயல்களை ஆதாரமாகக் கொண்டது. எல்லாப் பாடல்களிலும் பெரும்பகுதி இறைவனை வர்ணிப்பதிலும் அவனுடைய வீரச் செயல்களை விபரிப்பதிலும் செலவிடப்பட்டுள்ளது.

திருஞானசம்பந்தரைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு பத்துப்பாடல்களையும் அடுத்து பதினோராவது பதிகத்தில், இப்பாடல்களைப் பாடுபவர் இன்ன பயனைப் பெறுவார் என்று கூறுவதைக் காணலாம். சைவசமயக்குரவர் நால்வர், பன்னிரு ஆழ்வார்கள் ஆகிய அனைவரிலும் ஞானசம்பந்தரும் நம்மாழ்வாரும் மட்டுமே "பலஸ்ருதி" என்று சொல்லப்படும் பதினோராவது பாடலில் மேலே கூறிய பத்துப் பாடல்களையும் பாடுபவர் இன்ன பயனைப் பெறுவர் என்று கூறிச் சென்றுள்ளனர். இதிலிருந்து ஒன்றைத் தெரிந்து கொள்ளலாம். இவர்கள் இருவரும் மூன்று வயதிலே பாடத் தொடங்கியவர்கள். இவர்கள் வயதை நோக்கும்போது இவர்கள் தம் அறிவாற்றலை மட்டும் கொண்டு பாடினார்கள் என்று சொல்வதற்கில்லை. இறையருள் பூரணமாக இருவரையும் ஆட்கொண்ட காரணத்தால், இவர்கள் வாயிலிருந்து வரும் சொற்கள் இறைவன் சொற்களே ஆகும் என்று இருவரும் கூறியுள்ளனர்.

ஞானசம்பந்தரைவிட்டு, அப்பர் சுந்தரர் ஆகிய இருவரையும் பார்ப்போமானால், இவர்களுடைய பாடல்கள் இறைவன் புகழ்பாடுவதாக அமைந்துள்ளனவே தவிர வேறுவழியில் செல்லவில்லை. இந்தக் கருத்தை மனதில் வைத்துக்கொண்டு எட்டாந் திருமுறையாகிய திருவாசகத்தை உற்றுநோக்கினால், அதிலுள்ள பாடல்கள் தேவாரங்களின் போக்கிலிருந்து முற்றிலும் வேறுபட்டுச் செல்வதைக் காணலாம். மூவர் முதலிகள் இறையனுபவத்தில் தோய்ந்தவர்கள் என்றாலும், அந்த அனுபவம் எப்படி இருந்தது என்பதைத் தெரிவிக்கவில்லை. பக்திஉணர்வு, இறைவனின் அளப்பெரும் பெருமை, தங்களுடைய சிறுமை, இறைவன் தங்கள் மாட்டுக்காட்டிய கருணை என்பவை எல்லாம் தேவாரங்களில் இடம் பெற்றுள்ளன என்பதில் ஐயமில்லை.

ஆனால், மணிவாசகப் பெருமானை எடுத்துக் கொண்டால், இவர் பாண்டிய

மன்னனுக்கு முதன் மந்திரியாக இருந்த காரணத்தால் பரந்துபட்ட உலகியல் அறிவோடு பாடுகின்ற ஆற்றலும் அவர்மாட்டு இருந்திருக்கவேண்டும். இந்நிலையில் ஆலவாயின் அவிர்சடைக்கடவுள் திருவாதவூரரைத் திசைதிருப்பி ஆட்கொண்டு உலகத்திற்குப் பயன்தரும் திருவாசகத்தை அவர்மூலம் வெளிப்படுத்த முடிவு செய்தார். அதன்பயனாகத் திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியில் மனிதவடிவுடன் குருவாக அமர்ந்திருக்கின்றார். அமைச்சுத் தோரணையுடன் வருகின்ற வாதவூரருக்கு இந்தக் குருவின் காட்சி ஒரே விநாடியில் முழுமாற்றத்தைத் தந்துவிடுகிறது. இது நிகழ்ந்த விதத்தை அடிகளாரே,

"கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியில் சேவடி தீண்டினன் காண்க
சிவன் என யானும் தேறினன் காண்க"

என்று பேசுகின்றார்.

இறைவன் கற்பனைக்கு எட்டாதவர். எங்கோ எழுந்தருளியிருக்கின்றான் என்று கல்வி அறிவின் மூலம் கருதியிருந்த திருவாதவூரருக்குப் "புவனியில் திருவடி தீண்டினன்" என்று கூறும்போது, அவர் இதுவரை கொண்டிருந்த கற்பனை தகர்ந்து விடுகிறது. அதனாற்றான் பெருவியப்போடு அந்தக் குருவின் திருவடி இந்த மண்ணின் மீது பட்டிருப்பதைக் கண்டு வியக்கின்றார். இவர் மனிதர்களில் ஒருவரோ என்ற ஐயம் முதல் விநாடியில் வாதவூரரின் உள்ளத்தில் தோன்றியிருக்க வேண்டும். ஆனால், மனிதர் போல இருக்கின்ற அந்தக் குருவிடத்திலிருந்து புறப்பட்ட அதிர்வுகள் தம்மை முழுவதுமாக ஆட்கொள்ளுவதை உணர்கின்றார் திருவாதவூரர். மனிதர்களுள் யாரோ ஒருவர் என்ற எண்ணம் மறையத் தொடங்குகின்றது. எந்த மனிதனுக்கும் இத்தனை அதிர்வுகளை உண்டாக்கும் ஆற்றல் இல்லை. எனவேதான் "சிவன் என யானும் தேறினன் காண்க" என்று பேசுகின்றார். இந்த மனநிலையிற்றான் அந்தக் குருவின் எதிரே செல்கின்றார். குரு உபதேசம் செய்கின்றார். அந்த உபதேசச் சொற்கள் இவரை முழுவதுமாக மாற்றிவிட்டன. "எனை நான் என்பது அறியேன், பகல் இரவாவதும் அறியேன்" என்று பாடுகின்றார்.

இந்த மாபெரும் அனுபவம் அவரைத் தன்னுள் மூழ்கடித்து அதனுள்ளேயே இருக்குமாறு செய்கிறது. இப்போது எதிரே உள்ள குரு, அவருடைய சீடர்கள், திருப்பெருந்துறை என்ற எதுவும், அவருடைய புறக்கண்களுக்குப் புலனாகவில்லை. தேனில் விழுந்த ஈயைப்போல அந்த அனுபவத்தில் ஆழ்ந்து விடுகின்றார். அந்த அனுபவத்திலிருந்து மீண்டபோது, எதிரே குருவும் இல்லை, சீடர்களும் இல்லை. கண்டது கனவோ என்று அஞ்சுகிறார் பெருமான். ஆனால் கனவு இத்தகைய அனுபவத்தைத் தருதல் இயலாது எனவே அனுபவம் உண்மை தான்; குரு இருந்ததும் உண்மைதான்; அவர் அருளுபதேசம் செய்ததும் உண்மைதான். இப்போது அவர் மறைந்ததும் உண்மைதான். அப்படியானால் அவர் மறைவுக்கு காரணம் என்ன என்ற ஆராய்ச்சியில் புகுந்தார். தம்முடைய தகுதி இன்மையால் இறைவன் தம்மை இங்கேயே விட்டு விட்டுச்

சென்று விட்டாரோ என்று புலம்புகின்றார். அந்த அனுபவம் கைவிட்டுப் போனபின், இனி இந்த உலகில் வாழ்ந்து பயனில்லை என்றெல்லாம் நொந்து கொள்கின்றார். இந்த வருத்தம் - பச்சாதாபம் எவ்வளவு காலம் நீடித்தது என்று எமக்கும் தெரியாது, அவரும் கூறவில்லை. ஆனால் கருணாமூர்த்தியாகிய இறைவன் உள் நின்று உணர்த்தியிருக்கவேண்டும். ஆகவேதான் உயிரைத் துறக்க நினைக்காமல் இந்த அனுபவத்தை நினைந்து நினைந்து பாடவேண்டும் என்று நினைக்கின்றார்.

பசுமாடு சுரப்பு விடவேண்டுமானால் கன்றுக்குட்டியை அவிழ்த்து விடவேண்டும், அது ஊட்டத் தொடங்கியவுடன் பால் சுரக்கின்றது. அந்தச் சுரப்பால் கிடைக்கின்ற பாலை நாம் பெறவேண்டுமானால், கன்றுக்குட்டியை இழுத்துத் தூரத்தில் கட்டத்தான் வேண்டும். அது போல திருவாதவூரருக்கு அருளனுபவத்தைத் தந்த இறைவன் அதிலேயே அவர் மூழ்கிவிடாமலிருக்க அந்த அனுபவத்தைத் தொடராமல் தடுத்துவிட்டார். காரணம் திருவாசகம் ஆகிய பால் மனித குலத்திற்குக் கிடைக்கவேண்டும் என்பதினாலாகும்.

ஆக, சமய குரவர்கள் எமக்குத் தந்தருளிய பாடல்களுள், திருவாசகம் ஓர் அனுபவப் பிழிவாகும் என்று கூறுவது பொருத்தமுடையதாகும் "திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்" என்று கூறப்பட்டது இதன்பெருமையைச் சுட்டி நிற்கிறதல்லவா? இறுதியாக மனிதகுல ஈடேற்றத்துக்கு, அவர்களின் பிறவிக் கடலைக்கடந்து கரையேறுவதற்கு, மீண்டும் பிறப்புண்டேல் அவனுடைய பாதாரவிந்தங்களின் கீழ் இருக்கப் பெரிதும் துணை நிற்கும் சைவத் திருமுறைகளை நாம் எல்லோரும் பாராயணம் செய்து ஆன்ம விடுதலை பெறுவோமாக.

---

ஞானம் என்பது என்ன? அதனை வள்ளுவரும் "எப்பொருள் எத்தன்மைத் தாயினும்" எனும் குறள் மூலம் கோடி காட்டியுள்ளார் அதன் கருத்து "யார் வாயிலிருந்து எந்த விடயத்தைக் கேள்விப்பட்டாலும் சரி, அந்த விடயத்திலுள்ள உண்மையான பொருளைக் கண்டுபிடிப்பது தான் அறிவு" என்கிறார்.

ஆமாம்..! நம் காதில் விழுகிற செய்திகள் விஷயங்கள் எல்லாமே ஞானமல்ல அவற்றை எல்லாம் நம் சிந்தனையில் இருத்தி தேர்ந்து தெளிகிறோமே அதுதான் ஞானம்.

நாம் ஞானத்தைப் பெறவேண்டுமானால் பசும் பாலிலிருந்து நெய் எடுப்பதற்கு எவ்வளவு பிரயாசைப் படுகின்றோமோ அதே போலத்தான் நாம் ஞானத்தைப் பெறவேண்டும். அது போல் தான் எத்தனையோ அறிஞர்களிடம் இருந்தும் எத்தனை எத்தனையோ செய்திகளை நாம் கேட்டுப் பெறுகிறோம். அத்தனையும் ஞானம் ஆகிவிடாது ஆனால் அதற்குள் தான் ஞானம் இருக்கும் அந்த ஞானத்தை நாம் தான் தேடித்துருவி கண்டுபிடிக்க வேண்டும்.

**நம் இன்பங்கள் ஆழமில்லாதவை. துன்பங்கள் ஆழமுடையவை.**

உ

(தொடர்ச்சி...

# 2006ஆம் ஆண்டு உற்சவம் (23.08.2006) தொடக்கம் நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| ஜெகா மோட்டோஸ் வல்வெட்டி | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| பாக்கியநாதன் பிரதீபன் | குப்பிளான் | 5000. 00 |
| பிரவீனா ஈசன் (நிமலன்) | சங்கானை | 3000. 00 |
| உதயராசா தாரணி | கோண்டாவில் வடக்கு | 2000. 00 |
| இராசரெத்தினம் இராசராகுலன் | சுண்ணாகம் | 3000. 00 |
| S. குமாரசாமி J.P | பத்தமேனி | 2000. 00 |
| வைகுந்தநாதன் கலைவதனி | அச்சுவேலி | 1000. 00 |
| ஜெ. சந்திரப்பிரகாசம் ஆத்தியடி, | பருத்தித்துறை | 5000. 00 |
| கா. மகேந்திரம் கருணாநிதி ச.ச. நிலையம் வல்வெட்டி | | 10,000. 00 |
| சி. கிருஷ்ணபிள்ளை J.P | ஆவரங்கால் | 1000. 00 |
| ம. பாலசிங்கம் | இமையாணன் | 1000. 00 |
| திரு பத்மநாதன் | சிறுப்பிட்டி | 500. 00 |
| த. கலாபதி | யாழ்ப்பாணம் | 500. 00 |
| திரு சிவசுப்பிரமணியம் | சாவகச்சேரி | 500. 00 |
| ஐ. சிவநாதன் (மருதம்) | நெல்லியடி | 10,000. 00 |
| ப. வேல்செல்வம் | நாராந்தனை | 1000. 00 |
| இ. சிறிமகேஸ்வரன் | இணுவில்மேற்கு | 1000. 00 |
| இராசையா சிவதாசன் | நீர்வேலி | 1000. 00 |
| S. சோமாஸ்கந்தன் | கனடா | 1மூடை அரிசி |
| செல்வி கனகசுந்தரம்பிள்ளை சசிலேகா தோப்பு அச்சுவேலி | | 3000. 00 |
| கு. தியாகராஜசர்மா (நீர்வைமணி) | நீர்வேலி | 1000. 00 |
| திரு ஜீவரஞ்சன் | கொழும்பு | 2000. 00 |
| இளங்குமரன் சாமினா | (கனடா) | 2000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| N. ஜெயரெட்ணராஜா | இளவாலை | 10k அரிசி 5000. 00 |
| இ. ராசாசேந்திரம் (க.கு.க மூலம்) | பளை | 3000. 00 |
| S.K.M அரிசி ஆலை | வவுனியா | 2000. 00 |
| T. குழந்தைவேல் | | 5மூடை அரிசி 10k சர்க்கரை 10k பூடு |
| S. குபேரநாதன் | இணுவில் | 3750. 00 |
| A.S.S இராமச்சந்திரன் மாலிசந்தி | அல்வாய் | 1000. 00 |
| இ. தவமணி வசந்தகிரி | கரணவாய் | 1000. 00 |
| Dr. K. கனகசூரியர் | கொழும்பு | 5000. 00 |
| ஸ்ரீ நதியா நகைமாடம் ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | | 4000. 00 |

(தொடரும்...

அறிவின் முதற்பாடம் செல்வத்தை வெறுப்பது.

உ

# முருகனும் வள்ளலாரும்

## திரு நீர்வை இரா-சு அவர்கள்

தமிழ்ப் பாரம்பரியத்தில் முருகன் என்றும், வடமொழியில் கந்தன் என்றும், வைதீகநெறியில் சுப்பிரமணியம் தமிழ்க் கடவுள் என்றும் அழைக்கப்படுகின்றார். தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் முருகன் என்ற பதம் பல இடங்களில் நேரடியாகவும், மறைமுகமாகவும் காணப் படுகிறது. வடமொழி இலக்கியத்தில் கந் தன் என்றும், வேதங்களில் சுப்பிரமணியன் என்றும் கூறப்படுகிறது. இத்தகைய பின் னனியை அடிப்படையாகக் கொண்டு ஈழத்திருநாட்டில் முருகன்! கந்தன், சண் முகன், சுப்பிரமணியன், வேலன், சரவணன், கார்த்திகேயன் என பல நாமங்களில் சிவ னின் இளையகுமாரன் அழைக்கப்படு கின்றார்.

திருமலைக்குன்றிலுள்ள தெய் வத்தை வெங்கட சுப்பிரமணியன் எனவும் பழனியம்பதியில் ஆண்டி எனவும் அடிய வர்கள் அழைக்கின்றனர். முருகனை வேலாயுதம் என்று அழைப்பது தவறு ஏனெனில் முருகன் கையில் வேலுக்குப் பதிலாக தண்டே வைத்துள்ளார். எனவே இவரை தண்டாயுதபாணி என்று அழைப் பதே பொருத்தமுடையதாகும். பழனிமலை யில் வாழ்ந்த போகர் என்ற சித்தர் நவ பாஷாணங்களைக் கொண்டு தண்டாயுத பாணி சிலையை வடித்து தினமும் பஞ்சா மிர்தம் கொண்டு பாஷாணத்தால் ஆன சிலைக்கு அபிஷேகம் செய்வித்தார். போகர் சமாதி பழனியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

சங்ககால இலக்கியங்களான எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களில் திருமுருகாற்றுப்படை முருகனுடன் தொடர்புபட்ட இலக்கிய ஆதாரநூலாகக் காணப்படுகிறது. பொதுவாக சங்க இலக் கியப் பாடல்களின் ஆரம்பம் முருகனை வணங்கி ஆரம்பிப்பதால் அவற்றிக்கு முன் னர் "திரு" என்ற அடைமொழியைச் சேர்ப் பது விசேட தன்மையாக இருந்துள்ளது.

முருகப் பெருமானின் நாமங்கள் அவரது நிலைகளுக்கேற்ப அழைக்கப்படு வதையும் அவதானிக்க முடிகிறது. குழந்தையாக இருக்கும் போது வேலன் என்றும், இளைஞனாக உள்ளபோது பால சுப்பிரமணியன், குடும்பஸ்தராக தோன்றும் போது வள்ளிமணாளன், தெய்வானையின் கேள்வன் என்றும், போர்வீரனாக தோன்றும் போது தேவசேனாதிபதி என்றும், அடியவர் களின் மனக்கண்ணில் வடிவேலனாகவும் வணங்கப்படுகின்றார். அன்புக் கடவுளாக இருக்கும்போது குறிஞ்சி வேலனாகவும், அறிவுக்கடவுளாக இருக்கும்போது ஞான பண்டிதனாகின்றான். முருகப்பெருமானின் வேல் வீரத்தையும், தண்டம் அறிவையும் குறிக்கும்.

இந்தப் பிரபஞ்சத்தை ஆள்வது ஒலியும் ஒளியுமே ஆகும். கலிநாயகரை ஒலியாகவும் முருகனை ஒளியாகவும் ஒப்பிட்டுக் குறிப்பிடுவார்கள். தில்லைக் கூத்தன் கையிலுள்ள உடுக்கு ஒலியை யும், நெருப்பு ஏந்தியகை ஒளியையும் குறித்து நிற்கிறது. கண்ணபெருமானின் கையிலுள்ள சங்கு ஒலியையும் சக்கரம் ஒளியையும் குறித்து நிற்கின்றது. எமக்கு ஒலி, ஒளி இல்லாவிட்டால் வாழ்வது கடினம். இவற்றின் முக்கியத்துவத்தை

கருதியே தில்லைக்கூத்தன், கண்ண பெருமானின் உருவங்கள் உருவகப்படுத் தப்பட்டுள்ளது. சுப்பிரமணியம் என்றாலே எதிலும், எங்கும் அவன்தான் எனப் பொருள்படும்.

முருகன் குருவானவன் தன்தகப் பனுக்கே பிரணவமந்திரத்தை போதித்து சிவகுருநாதனாகவும், சுவாமிநாதனாகவும் விளங்கினான். சுவாமிமலையில் இக்காட்சி தத்துவரூபமாகக் காணப்படுகின்றது. கற்க வேண்டுமானால் தந்தையாயினும் மகனி டம் தலைவணங்கவேண்டும் என்பதையும் குருவாக இருப்பவர் உயர்ந்த இடத்தில் இருக்கவேண்டும் என்பதையும் இக்காட்சி புலப்படுத்துகின்றது.

இத்தகைய சிறப்புக்களுடைய முருகனிடம் அருள்பெற்ற அருள்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகளார் பாடிய திருவருட்பாவில் முதலில் முதன்மைபடுத் தியது முருகப்பெருமான் பற்றிய கருத்துக் கள்தான். இவர் முருகனை சண்முகனாக கண்ணாடியில் கண்டார். இளம்வயதில் சென்னையில் இருந்தபோது கந்தக்கோட்ட கார்த்திகேயனை நேரில் தரிசிக்கும் வாய்ப்புப் பெற்றார். அன்றிலிருந்து சுப்பிர மணியக் கோட்பாட்டை வளர்க்கத் தொடங்கினார். சுப்பிரமணியர் என்பது மனித உடலில் இரு புருவங்களிடையே தோன்றும் தெய்வீக ஒளியாகும் என்றும் மூலாதாரத்திற்கு மேலே உள்ள நாடித் துடிப்பைக் குறிக்கும் என்றும் எமது உடலிலுள்ள ஆறு ஒளிப்பிழம்பும், ஆறு அறிவும் ஆறு தலைகளைக் கொண்டுள் ளன. இதனால் ஆறுமுகன் என்று அழைக் கப்பட்டார் என இராமலிங்க அடிகளார் குறிப்பிடுகின்றார்.

எண்ணம், அறிவு ஆகிய ஆதாரங் கள் இரண்டு கால்களையும், ஒளிப்பிழம் பான ஆறு ஆதாரங்களை பன்னிருகைக ளும், வேல்சக்தியையும், மணி ஒலியை யும், தலஜம் என்பது புகழையும், சரஸ் சியா என்பது கருணையும், குக்குடம் - மனத்திருப்தியையும், பிரக்காம் - விருப்ப மின்மையையும், தண்டா - உறுதியான முடிவையும், பாணன் - அன்பையும், அபயா - அமைதி விரும்பலையும், வரதா - பொறுமையையும், கடம்பமாலை - பற்றின்மையையும் குறித்து நிற்கிறது.

வள்ளலார் பிரபஞ்சத்தை மனித உடலில் கண்டார். புராணங்கள் பாசநூல் களாகவும், வேதங்கள் பசுநூல்களாகவும் ஆகமங்கள் பதிநூலாகவும், உபநிடதங் கள் அனுபவநூல்களாகவும் கொள்ளப்பட் டன. புராணங்களைவிட வேதங்களும், வேதங்களைவிட ஆகமங்களும், ஆக மங்களைவிட உபநிடதங்களும் உயர்ந் தவை. புராணநிலையில் உள்ள மனிதர் களை உபநிடதநிலைக்கு கொண்டுவர வள்ளலார் முயன்றார்.

நட்சத்திரங்களில் கார்த்திகை, விசாகம், பூரம், ஷஷ்டிதிதி, செவ்வாய்க் கிழமை போன்றன முருகனுக்கு உகந் தவை. கார்த்திகேயன், விசாகப்பெருமான் முருகனுக்கு நட்சத்திர அடிப்படையில் அமைந்த பெயர்கள் ஆகும். ஒளி உமி ழும் நட்சத்திரமாகிய கார்த்திகையின் தேவதை அக்னி. அதனால்த்தான் திரு வண்ணாமலையில் கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டு வணங்கப்படுகிறது.

தைப்பூசத் திருநாளில் அறிவு நிறைவடைந்து, வள்ளலார் நிர்வாணம் அடைந்து, தெய்வீக ஜோதியாக திகழ்ந் தார். வள்ளலாரின் கருத்துப்படி ஞானிகள் கடவுளை எல்லா இடங்களிலும், யோகி கள் தங்கள் இதயங்களிலும், கர்மயோகி கள் அக்கினியிலும், கடவுளைக் கண்டு

**தனக்குச் சரிப்படாத எதையும் அசட்டுத்தனம் என்று சொல்வதுதான் உலகவழக்கு.**

தொழுகிறார்கள். பக்தர்கள் சிலை வடிவில் கடவுளைப் பார்க்கிறார்கள். வள்ளலார் கந்தக் கோட்டத்தில் சிலைவடிவில் சிங்கார வேலனைக் கண்டார்.

வள்ளலாரை நினைக்கும் போதெல்லாம் முருகன் நினைவுவரும். முருகனைப் போல மரணமில்லாமல் பெருவாழ்வு பெற்ற வள்ளலார் எங்கும் வியாபித்துள்ளார். குமரகுருபரருக்கும், அருணகிரிக்கும் காட்சி தந்த கந்தக் கடவுள் வள்ளலாருக்கும் காட்சி தந்தார். பள்ளிக்கூடம் போகாமல் கந்த கோட்டத்திற்குச் சென்று முருகனை வணங்கி அவர் மீது பல பாடல்கள் இயற்றினார். எப்பொழுதும் தன் அறையில் ஒரு கண்ணாடியை மாட்டி அதற்கு மாலை சூட்டி பழம் வைத்து, கற்பூரம் காட்டி கண்ணிமை கொட்டாது அதனை உற்று நோக்கி வருவார். ஒரு நாள் கண்ணாடியில் திருத்தணிகை வேலன் உருவம் தெரிய கீழ்க்காணும் பாடலைப் பாடினார்.

சீர்கொண்ட தெய்வதங்களாலும் திகழ் கடப்பந்தார்
கொண்ட பன்னிரு தோள்களும் தாமரை தாள்களும் ஓர்
கூர்கொண்ட வேலும் மயிலும் நற்கோழிக் கொடியும்
அருட்கார் கொண்ட வண்மைத் தணிகாலசமும் என் கண்ணுற்றதே

அன்று முதல் வள்ளிக் கேள்வனின் திருவருளால் எல்லாக் கலைகளும் திறமைகளும், ஆற்றலும் தாமே வள்ளலாருக்கு வந்தடைந்தன. இவ்வாறு வள்ளலாருக்கும், வடிவேலனுக்கும் ஏற்பட்ட உறவு தெய்வீகமானது காலத்தால் அழியாது.

---

*(நித்தியஅன்னப்பணி தொடர்ச்சி...*

| | | |
|---|---|---|
| ஸ்ரீகரன் அபிலஷா | பிரான்ஸ் | 10,000. 00 |
| செங்கோ குடும்பம், வைரமுத்து குடும்பம் இடைக்காடு | | 1000. 00 |
| ஸ்ரீகுமரன் யாழ் ஸ்தாபனத்தார் (மருதம்மூலம்) | | 1மூடைதீட்டல் |
| Dr.G. பவானி | யாழ்ப்பாணம் | 60,000. 00 |
| பாலசுப்பிரமணியம் மூலம் திருமதி நேசரெத்தினம் U.K | | 10,000. 00 |
| க. சிவயோகராணிமூலம் முத்தையாகுடும்பம் கனடா | | 5000. 00 |
| செல்வி ச. ஸ்ரீரங்கநாயகி | தாதிஉத்தியோகத்தர் | 1000. 00 |
| P. ஞானேஸ்வரி | | 500. 00 |
| கிருஸ்ணமூர்த்தி லதுர்ஷன் | கரவெட்டிமத்தி | 1000. 00 |
| S. சிவபாதம் சிறுப்பிட்டிமேற்கு | $^1/_2$ மூடைஅரிசி | 1000. 00 |
| செல்வி இராமலிங்கம் சகோதரிகள் | வண்ணார்பண்ணை | 5000. 00 |
| கௌரி புஸ்பகாந்தராஜா | பிரான்ஸ் | 3000. 00 |
| சி. மயில்வாகனம் | திக்கம் | 500. 00 |
| ஆ. கதிரிப்பிள்ளை | மயிலிட்டி | 5000. 00 |
| பொ. வெங்கடேஸ்வரன் | வல்வை | 1000. 00 |
| K. சுரேந்திரன் | நீர்வேலி | 1மூடை அரிசி |

(தொடரும்...

மனஅமைதி வேண்டுமானால் பிறரிடம் குற்றம் காணாதே.

உ

(தொடர்ச்சி...

# அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்...

செல்வி தி. வரதவாணி அவர்கள்

மனுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷீ கச்சித் யததி ஸித்தயே
யததாமபி ஸித்தானாம் கச்சின்மாம் வேததிதத்தை (7:3)
என்கிறது கீதை.

**ஆ**யிரமாயிரம் பேர் என்னை அடைய நினைக்கின்றனர். ஆனால் அதில் சிலரே என்பக்கம் உண்மையில் நெருங்கி வரும் ஆயிரம் பேர்களில் யாரோ ஒருவன் தான் என்னை அடைகிறான். இந்த உலகமே மாயையில் மயங்கிக் கிடக்கிறது. நாம் சில இலக்குகளுடன் தொழிற்படுகின்றது. ஆனால் அதை அடைய எவ்வளவோ போராடுகிறோம். சிலது முடியாமல் போயும் விடுகிறது. அவன் (இறைவன்) நினைப்பது மட்டுமே நடக்கும். செப்பிடு வித்தைக்காரன் செய்வதை, பார்வையாளர் செய்ய முயன்றால் அது கடினம்.

உலகியல் மாயாஜாலங்களிலிருந்து விடுபட வேண்டுமானால் அதற்கு அவற்றைத் தோற்றுவித்த மேலான சக்தியை சரண்புகுந்தால் மட்டுமே இயலும். அவ்வாறு சரண்புகுந்த ஆத்மாக்களது செயல் ஒன்றே அவளது மாயாஜாலங்களினைக் கண்டறிந்து தொழிற்படும். இதனையே

தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா (7:14)
என்கிறார் கிருஷ்ணபரமாத்மா.

எனவே இறை மாயாஜாலங்களை இறைசக்தியைச் சரண்புகுந்தவரே கண்டறிவர். இவர்களே செயற்கரிய செய்பவர் என்று திருவள்ளுவர் கூறும் ஆத்மீக வள்ளல்கள்.

இக்கருத்தை விளங்கிக்கொள்வதற்கு நாம் அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர் வாழ்வின் ஒரு சம்பவத்தை நோக்குதலினூடாக கண்டறிந்து கொள்ளலாம்.

இறைஞான வள்ளலாம். அருட்கவி ஐயா இறைவனைச் சரண்புகுந்த ஞான முத்தர். இவர் உலகியல் வாழ்வின் உள்ளர்த்த மரபுக்கமைய வாழ்ந்ததுடன் பல தெய்வீக அற்புதங்களைப்புரிந்து தெய்வீக மாயையையே உலகிற்கு எடுத்தியம்பிய ஞான வரம்பினர்.

ஒருநாள் ஐயா அவர்கள் பரந்தனூடாக உருத்திரபுரம் போவதற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். பிற்பகல் 2.00 இருக்கும். புறப்படும் தருணம் ஐயாவின் அன்பர் ஓவிசியர் திரு. இராசேந்திரம் அவர்கள் வந்தார். ஐயா உங்களிடம்தான் வந்தேன் என்றார். நேரத்தைப் பார்த்துவிட்டு என்னவிடயம் நான் உருத்திரபுரம் செல்ல இருக்கிறேன். கூடியவரை சீக்கிரமாக விடயத்தைக்கூறும் என்றார் ஐயா.

“ஐயா எங்கள் கனகாம்பிகை அம்மனுக்கு ஒரு கிணறு நிலையம் எடுக்கவேண்டும் என்றார் ஓவிசியர். அப்படியா நான் இப்பொழுது உருத்திரபுரம் போய்விட்டு நேரம் இருந்தால் வருகிறேன்” எனக்கூறி அவசரமாகப் புறப்பட்டு விட்டார்.

கனகாம்பிகை அம்மன் ஆலய தீர்த்தக்கிணற்றுக்கு நிலையம் பல் நிபுணர்த்துவம் வாய்ந்த நிலையகாரர் களால் பார்க்கப்பட்டும் ஒரு நிலையத்திற் கும் தண்ணீர் வந்தபாடில்லை. இறுதியாக ஓவிசியர் இராசேந்திரம் இச்செய்தியை அறிந்தபின்னர் தனது அன்பர் அருட்கவி ஐயா இதில் வல்லவர். இது அம்பிகையின் திருவிளையாடல் அவளது இவ் மாயா விளையாட்டைக் கண்டறிந்து அதன்படி செயற்பட அவர் அடியார் அருட்கவி ஐயா வால் தான் முடியும் என கோயில் நிர்வாகி களிடம் கூறிவிட்டே அன்று ஐயாவைச் சந்திக்கவந்தார்.

பரந்தனில் தாம் நிற்பதாகக் கூறப் பட்ட இடத்தில் ஓவிசியரும் காத்துக் கொண்டு நின்றார். மாலை 6.00மணி ஆகி விட்டது. ஐயாவைக் காணவில்லை. எல்லாம் அன்னைலீலை என ஒருகணம் கண்ணைமூடி அன்னை கனகாம்பிகையை நினைந்து கண்ணைத்திறந்தார். அப் பொழுது அருட்கவி ஐயாவின் கார் வரு வது தெரிந்தது.

ஆலயம் சென்றதும் பொழுதும் இருட்டிவிட்டது. இருட்டில் எவ்வாறு நிலை யம் எடுப்பது என நினைந்து செய்வ தறியாத விநாசித்தம்பிஐயா ஒரு நிமிடம் அன்னையை தியானித்தார். பூசகர் மூலம் வெளிவீதியின் முன்வாசலில் சூடம் ஏற்று வித்தார். அச்சுடரொளியில் கனகாம்பிகை யின் அருட்காட்சி ஐயாவுக்கு கிடைத்தது. கண்ட உடனே சிலபாடல்களைக் கடகட வெனப்பாடினார்.

"சங்கரன் கங்கையை சடையிலே வைத்ததென்னும் சரித்திரம் பொய்யல்லவே
சங்காக நீவந்து தக்கனின் மகளாய ஐமுனையும் இருக்குதம்மா
தங்கவடி வேலவன் சரவணத்துதித்த சுதை சகலர்க்கும் தெரியுமம்மா
இங்குநின் பக்தரின் தாகந்தீர்க்கும் கிணற்றை இருக்குமிடம் சொல்லுவாயே"

பாடல் முடிந்ததும் அங்கு ஒரு அசரீரி கேட்டது. "கோயிலின் தெற்கே 36அடி தூரத்தில் ஒரு கொன்றைமரம் அதை மத்தியாய் வைத்துக் கிணறு வெட்டலாம்" இவ்வாக்குக் கேட்டதும் ஆலயத்துள் மூலஸ்தான இறைவி பச்சை வண்ணச் சேலையுடன் காட்சி அருளினா ராம். இவ்வரிய பேற்றை ஐயா மட்டுமல்ல அங்கு நின்ற அனைவரும் கண்டுகளிக்கும் பேற்றை பெற்றனராம்.

அவ்வாறு கட்டப்பட்ட கிணறுதான் இன்றும் வற்றாவாவியாக அடியாரின் தாகத்தைத் தீர்க்கும் புண்ணிய தீர்த்தமாக விளங்குகிறது.

இவ்வாறு இறைசக்தியின் அருள் அளப்பரியது. அதனை அருட்கவிஐயா போன்ற அன்பரினால்த்தான் செயற்படுத்த இறைசக்தியின் திருவிளையாடல் தொழிற் படுத்தும்.

(தொடரும்...

உயிர் வாழ்வதற்குக் காற்றும் நீரும் உணவும் சூரிய ஒளியும் தேவைப்படுவது போல, ஒவ்வொருவருக்கும் நல்ல நம்பிக்கை தேவை.


சுயநலமின்றி வேலை செய்யக்கூடிய தகுதி வாய்ந்த ஒருவன் மேலான மனவலிமை பெற்றவனாக விளங்குகிறான்.

**ஒருவரின் பேச்சிலிருந்து உள்ளப் பண்பை அறியலாம்.**

உ

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்



ஆற்றங்கரையில் அமா்ந்திருக்கும் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனின் சிறப்பை அவன் அள்ளி வழங்கும் அருளை அள விட்டுக் கூறுதல் எளிதான காரியம் அல்ல. ஆத்மீக ஈடேற்றத்திற்காக மட்டுமன்றி உலகியலில் ஏற்படுகின்ற பல்வேறு வகை யான துன்பங்கள், மனச்சுமைகளிலிருந்து விடுபடுவதற்காகவும் பல்வேறு இடங்களி லிருந்து அடியார்கள் இவ்வாலயத்தை தரி சிக்கவருவது பிரசித்தமானது.

தாங்கமுடியாத, சுமக்கமுடியாத பல்வேறு வகையான துன்பங்களால் விரக் தியடைந்து இனி என்ன வாழ்க்கை என் னும் எண்ணத்துடன் வாழும் மக்கள் கூட் டத்தினரே இன்று இந்த மண்ணில் அதிக மாக வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான வர்களில் பலர் பக்தியுடனும் அசையாத நம்பிக்கையுடனும் கலியுகவரதன் அமர்ந் திருக்கும் இவ்வாலயத்திற்கு வந்து வழி பட்டு தங்கள் துன்பங்கள் நீங்கி பயனடை கின்ற செயற்பாட்டை இன்றும் இங்கே காணக்கூடியதாக உள்ளது.

அந்த வகையில் ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்திற்கு வருகைதரும் அடி யார்களில் பலர் ஆலய வழிபாடு முடிந்த வுடன் தங்கள் வீடுகளை நாடிப் போனா லும் ஒரு சிலர் தங்களுக்கு ஏற்பட்டுள்ள மனக்குறைகளை சந்நிதியானிடம் சொல்லி முறையிட்டு அவனது ஆலயச் சூழலில் தங்கி தங்கள் குறைதீரத் தம்வீடு போவதும் இவ்வாலயத்திற்குரிய தனிச் சிறப்பாகும்.

**ஓர் அவமானத்தைப் பொறுத்துக்கொள்வது அதற்குப் பழிவாங்குவதைவிட மேலானது.**

இப்படியான நிலையில் ஆலயத்தில் தங்கி இருக்கும் சிலரால் ஆலயச் சூழல் மாசுபடுவது தவிர்க்கமுடியாதுதான். இருந்தாலும் இவ்வாலயத்தில் நடக்கும் குற்றம் குறைகளைக்கூறி யாரையும் மனம் நோகச் செய்வது என்பது சந்நிதியானுக்குப் பிடிக்காத விடயமாகும். இவ்வாலயத்தில் பூசை ஆற்றும் பூசகர்கள்கூட சந்நிதியானுக்கு பயந்தோ, பணிந்தோ யார் என்ன குற்றம் செய்தாலும் அதில் குற்றம் இருப்பினும் அவர்கள் எல்லாம் சந்நிதி வேலன் பார்த்துக் கொள்வான் என்று அவ் விடயத்தில் தலையிடாது விலகிவிடுவார்கள்.

இதற்கு அமைவாக ஆலயத்தில் சரியைத்தொண்டுகள் புரிந்துகொண்டு இருந்த ஓர் அடியவரின் செயலில் குறை காணமுற்பட்ட ஓர் அன்பரின் அனுபவத்தை இம்முறை சந்நிதியான் எனும் தொடரின் மூலம் உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம். குற்றம் குறை தீர்த்து வைக்கும் சந்நிதிவேலன் ஆலயந்தேடி மாவிட்டபுரத்தைச் சேர்ந்த திரு நாகலிங்கம் அவர்கள் வந்து தங்கி சரியைத் தொண்டுகள் சிலபுரிந்து சந்நிதிவேலனின் அடிமையாக வாழ்ந்து வந்தார். அவர் ஆற்றும் தொண்டுகளைப் பார்க்கும் போது ஓர் இளைஞனுக்கு இருக்கும் துடிப்புடன் செயலாற்றுவது போல் இருக்கும். உண்மையிலே அவர் செயலாற்றுவது போல் இருந்தாலும் அவருள் இருந்து சந்நிதியானே செயல் ஆற்றுகின்றான் என்பதுவே உண்மை. இதை எல்லோரும் புரிந்து கொள்வது என்பது இயலாதகாரியம். அவன் அருள் பெற்றுவிட்டால் அவன் வடிவமாகவே மாறிவிடும் அடியவர்கள் சிலரை இவ்வாலயத்திலே காணக்கூடியதாக இருக்கிறது.

திரு நாகலிங்கம் அவர்கள் பற்றிய சில சம்பவங்கள் சந்நிதியான் என்ற தொடரில் வெளியீட்டு இருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. 2005ஆம் ஆண்டு வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி மூன்றாம் நாள் சந்நிதி வேலவனுக்கு தொண்டுகள் புரிந்துவரும் திரு நாகலிங்கம் அவர்கள் அன்றைய மாலை உற்சவம் முடிந்தபின் பகல் உற்சவத்தின் போது ஆலயத்திற்கு வருகை புரிந்த அடியார்களுக்கு வழங்கப்பட்ட அன்னதானத்தில் மீதமாகவுள்ள சாதம், கறிகள் எல்லாவற்றையும் ஒரு பாத்திரத்தில் இட்டுக் குழைத்தபின் அந்தக் கறியமுதினை ஆலயத்தில் தங்கியுள்ள அடியார்களுக்கு வழங்கும் வண்ணம் ஆலய முன் வாசலுக்கு எடுத்து வந்தார். குழைத்து எடுத்து வந்த கறியமுதைப் பகிர்ந்து கொடுப்பதற்கு ஏதுவாக ஆலயமுன்வாசலில் உள்ள திருப்பணி உண்டியல் மீது வைத்து அதனை அடியார்களுக்கு வழங்கிக் கொண்டு இருந்தார்.

திரு நாகலிங்கம் இச் செயலைச் செய்து கொண்டிருந்தபோது சந்நிதி வேலவனால் ஆட்கொள்ளப்பட்ட மருதர் கதிர்காமர் பரம்பரையைச் சேர்ந்தவரும் ஆலய திருப்பணிக் காரியாலயத்தில் பணி புரிந்து வருபவருமாகிய செல்வி செல்வறோசா திரு நாகலிங்கம் திருப்பணி உண்டியலின் மீது வைத்து கறியமுது வழங்கிக் கொண்டிருக்கும் காட்சியைக் கண்ணுற்றார். ஆலய உற்சவ காலத்தில் அந்த இடத்தில் வைத்து கறியமுதை வழங்கிக் கொண்டிருந்த நாகலிங்கம் தான் திருப்பணி உண்டியல் மீது வைத்து வழங்குவது சரியா என்ற நினைப்பு இல்லாத வகையில் அடியார்களுக்கு கறியமுதை வழங்கிக்கொண்டு இருந்தார்.

திரு நாகலிங்கம் ஆலயத்தி

**புத்திசாலி எதையும் உபயோகமில்லாததாக நினைப்பதில்லை.**

லிருந்து செய்து வரும் சகல சரீரத் தொண்டு பற்றி அறிந்திருந்த செல்வி செல்வறோசா அவர்கள் நாகலிங்கத்தினை அணுகி தான் வழமையாக அழைக்கும் பாணியில் "நாகலிங்கப்பா என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறீர்கள். ஆலயமுன் வாசலில் அதுவும் திருப்பணி உண்டியல் மீது தானா இந்தக் கறியமுதை வைத்து வழங்கவேண்டும். ஏன் வேறு இடம் இல்லையா? இதில் வைத்து வழங்கிக் கொண்டிருப்பதனால் கீழேசிந்தும் கறியமுதினால் இந்தத் திருப்பணி உண்டியல் அழுக்காகிவிடும். ஆகையால் இதனை வேறிடத்தில் கொண்டுபோய் செய்யுங்கள் என்று கூறினார்.

செல்வி செல்வறோசா இப்படிக் கூறியும் திரு நாகலிங்கம் தான் செய்து கொண்டிருந்த பணியைச் செய்வதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். செல்வறோசாவின், ஏன் மற்றவர்களின் பார்வைக்கும் கறியமுது வழங்கும் செயல் பிழையாக இருந்தாலும் அச்செயலை சந்நிதியான் அனுமதியுடன் தான் நாகலிங்கம் செய்கின்றார் என்னும் எண்ணத்தை செல்வி செல்வறோசா உணரவேண்டும் என்றவிதத்திலும், சந்நிதி ஆலயத்தில் நடைபெற்றுவரும் சகல செயற்பாடுகளுக்கும் சந்நிதியானே மூலகாரணம் என்னும் பாரம்பரியமாக வழங்கிக் கொண்டுவரும் நம்பிக்கையை, தனக்கு பூசை வழிபாடு ஆற்றும் இளம் சந்ததியினரும் உணரவேண்டும் என்ற எண்ணம்போலும் சந்நிதியான் தனது தனித்துவமிக்க செயற்பாட்டினை நிகழ்த்திக் காட்டினார்.

ஆம்! செல்வறோசா அவர்கள் நாகலிங்கம் செய்யும் செயலைச் சுட்டிக் காட்டிவிட்டு இரண்டடி தூரம் நகர்ந்திருக்க மாட்டார். அவரது வலது பாதத்தின் சிறு விரல் மடங்கி சுளுக்கிவிட்டது. அவரால் மீண்டும் ஓர் அடியை எடுத்து வைக்க முடியாதபடி அவரது கால் மிகவும் வலித்தது. அவ்வலி தாங்கமுடியாது அவருக்கு அழுகையும் வந்துவிட்டது. அதன் பயனாக அவர் மனதில் சந்நிதியானது காரியத்தில் தான் பிழை கண்டு அதைத் திருத்தப்போனது தவறு என்ற எண்ணமும் சந்நிதிவேலவன் தன்னை நம்பிச் செயலாற்றும் அடியார்களிடம் எந்தளவிற்கு ஆளுமை வைத்துள்ளான் என்ற விடயமும் புலப்படலாயிற்று. தான் அறியாமை நிமித்தம் செய்த தவற்றினை மன்னித்து விடுமாறு சந்நிதியானைப் பணிந்துவேண்டித் தொழுதார். அதன் பயனாக அவரது பாதத்தில் ஏற்பட்டவலி படிப்படியாகக் குறைந்து தேர் உற்சவத்தின் போது முற்றாக நீங்கிவிட்டது.

சந்நிதி ஆலய சுற்றாடலில் நடைபெற்றுவரும் சகல செயற்பாடுகள் பலவற்றையும் மேலோட்டமாகப் பார்க்குமிடத்து இவை ஏதோ, எப்படியோ நடைபெறுகின்றன என்றும் நாம் நினைக்கக்கூடும். ஆனால் உண்மையில் இங்கே நடைபெறுகின்ற செயற்பாடுகள் அனைத்தும் ஆற்றங்கரை வேலவனும் ஆபத்பாந்தவனுமாகிய சந்நிதி முருகனுடைய அருட்பார்வைக்கு உட்பட்டு அவனே தோன்றாத்துணையாக நின்று வழிநடாத்துகின்ற கைங்கரியங்கள் என்பதை எம்மால் உணரக் கூடியதாக உள்ளது. இவற்றினை நாம் கண்கூடாக உணரவேண்டுமானால் சந்நிதி வேற்பெருமானிடம் வாருங்கள். சரணடையுங்கள்.

ஓம் முருகா!

முயற்சியில் கவனம் வைப்பவன் வெற்றி பெற்றான்; பலனில் கவனம் வைத்தவன் தோல்வி கண்டான்.

பிறருக்குப் பொருளால் உதவமுடியாவிட்டாலும் உடல் உழைப்பால் உதவலாம்.

உ

# சித்திரைமாத வாராந்த நிகழ்வுகள்

06-04-2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**விடயம்:- பண்ணிசை**

**வழங்குபவர்:- சி. தில்லைமணி**

(நல்லை ஆதீன ஓதுவார் யாழ் மின்சாரசபை)

---

13-04-2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**விடயம்:- கலை நிகழ்வு**

**வழங்குபவர்கள்:- யாழ் தாவடி ஸ்ரீராமகிருஷ்ண சமித்தி அறநெறிப் பாடசாலை மாணவர்கள்**

---

20-04-2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**சொற்பொழிவு:- பெரியபுராணம் (தொடர்)**

**வழங்குபவர்:- அ. குமாரவேல்** (சிரேஷ்ட விரிவுரையாளர்)

(யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

---

27-04-2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் 112ஆவது மாத வெளியீடு

## சித்திரை- 2007

**வெளியீட்டுரை:- திரு சிவ ஆறுமுகஸ்வாமி J.P**

**மதிப்பீட்டுரை:- திருமதி சகுந்தலாதேவி கனகராசா**

(இளை அதிபர் அச்சுவேலி மத்தியகல்லூரி)

பதிவு இல. Q.D/44/NEWS/2007

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த நிகழ்வுகள் 2007

**ஜனவரி**

01.01.2007 மார்கழி 17 திங்கள்
மங்களப்புத்தாண்டு ஆரம்பம்
02.01.2007 மார்கழி 19 புதன்
திருவாதிரை விஷேட உற்சவம்
15.01.2007 தை 1 திங்கள்
தைப்பொங்கல்
27.01.2007 தை 13 சனி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**பெப்ரவரி**

01.02.2007 தை 18 வியாழன்
தைப்பூசம் விசேட உற்சவம்
16.02.2007 மாசி 4 வெள்ளி
மகாசிவராத்திரி விசேட உற்சவம்
23.02.2007 மாசி 11 வெள்ளி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**மார்ச்**

05.03.2007 மாசி 19 சனி
மாசிமகம்
21.03.2007 பங்குனி 7 புதன்
ஆலய கும்பாபிஷேகதினம்
சகஸ்ரமகா சங்காபிஷேகம்
சண்முக அர்ச்சனை, விசேட உற்சவம்
23.03.2007 பங்குனி 9 வெள்ளி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**ஏப்ரல்**

01.04.2007 பங்குனி 18 ஞாயிறு
பங்குனி உத்தரம்
வைரவப் பெருமான் கும்பாபிஷேகதினம்
14.04.2007 சித்திரை 1 சனி
மங்கள இந்துப் புதுவருடப் பிறப்பு
(சர்வமித்து) மாலை விசேட உற்சவம்
19.04.2007 சித்திரை 8 வியாழன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**மே**

02.05.2007 சித்திரை 19 புதன்
சித்திரா பூரணை விரதம்
12.05.2007 சித்திரை 29 சனி
வருடாந்த சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
காலை 10 மணி சங்காபிஷேகம்
காலை 11 மணி சண்முகார்ச்சனை
மதியம் 12 மணி விசேட உற்சவம்
15.05.2007 வைகாசி 2 புதன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
30.05.2007 வைகாசி 18 புதன்
வைகாசி விசாகம் விசேட உற்சவம்

**ஜூன்**

13.06.2007 வைகாசி 30 புதன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
22.06.2007 ஆனி 5 வெள்ளி
ஆனி உத்தரம் விசேட உற்சவம்
25.06.2007 ஆனி 11 திங்கள்
தீர்த்தமெடுப்பு

**ஜூலை**

02.07.2007 ஆனி 18 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்
10.07.2007 ஆனி 26 செவ்வாய்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்
15.07.2007 ஆனி 31 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பர் பூசை

**ஆகஸ்ட்**

06.08.2007 ஆடி 21 திங்கள்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
12.08.2007 ஆடி 27 ஞாயிறு
ஆடிஅமாவாசை விரதம்
13.08.2007 ஆடி 28 திங்கள்
ஆலய மகோற்சவ ஆரம்பம்
கொடியேற்றம் அதிகாலை 5.30
16.08.2007 ஆடி 31 வியாழன்
காலைத்திருவிழா ஆரம்பம்
21.08.2007 ஆவணி 4 செவ்வாய்
பூங்காவனம்
22.08.2007 ஆவணி 5 புதன்
கைலாய வாகனம்
26.08.2007 ஆவணி 9 ஞாயிறு
சப்பறம்
27.08.2007 ஆவணி 10 திங்கள்
காலை தேர்
28.08.2007 ஆவணி 11 செவ்வாய்
காலை தீர்த்தம்
மாலை மௌனத் திருவிழா

**செப்ரெம்பர்**

03.09.2007 ஆவணி 17 திங்கள்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
30.09.2007 புரட்டாதி 13 ஞாயிறு
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**அக்டோபர்**

11.10.2007 புரட்டாதி 24 வியாழன்
நவராத்திரி விரதாரம்பம்
20.10.2007 ஐப்பசி 3 சனி
சரஸ்வதி பூஜை
21.10.2007 ஐப்பசி 4 ஞாயிறு
விஜயதசமி
கேதாரகௌரி விரதாரம்பம்
27.10.2007 ஐப்பசி 10 சனி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**நவம்பர்**

06.11.2007 ஐப்பசி 22 வியாழன்
தீபாவளி
09.11.2007 ஐப்பசி 23 வெள்ளி
கேதாரகௌரி விரதம்
10.11.2007 ஐப்பசி 24 சனி
கந்தசஷ்டி விரதாரம்பம்
15.11.2007 ஐப்பசி 29 வியாழன்
கந்தசஷ்டி சூரன்போர்
16.11.2007 ஐப்பசி 30 வெள்ளி பாரணை
தெய்வானை அம்மன் திருக்கல்யாணம்
24.11.2007 கார்த்திகை 8 சனி
திருக்கார்த்திகை விரதம்
விசேட உற்சவம் குமாராலய தீபம்
25.11.2007 கார்த்திகை 9 ஞாயிறு
விநாயக விரதாரம்பம்
விஷ்ணு ஆலய தீபம்

**டிசம்பர்**

15.12.2007 கார்த்திகை 29 சனி
விநாயகர் சஷ்டி விரதம்
திருவெம்பாவை பூஜாரம்பம்
16.12.2007 கார்த்திகை 30 ஞாயிறு
ஆண்டியப்பர் பூஜை
21.12.2007 மார்கழி 5 வெள்ளி
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்
24.12.2007 மார்கழி 8 திங்கள்
திருவாதிரை விசேட உற்சவம்

சுபமங்களம்
நன்றி